
சிலையைத்
தேடி...
பார்வதி
சித்திரக்
கதைகள்
வாண்டுமாமா

உங்கள் குழந்தைகளின்



மன வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும்




பள்ளிப் பாடங்கள்




மட்டும் போதாது.



புதியதோர் உலகைக் காணும்




வாய்ப்பை அளியுங்கள்

# சிலையைத் தேடி...



ரவி- நீலாவின் அப்பாவுக்கு சீனாவிலுள்ள பாரதநாட்டுத் தூதரகத்தில் பெரிய பதவி. ரவிக்குப் பத்து வயது. நீலாவுக்குப் பனிரெண்டு வயது. ரவிக்கு ஆறுவயதில் அவர்கள் தாயார் இறந்து விட்டாள். அதன் பிறகு தந்தை கோபால்னே குழந்தைகளுக்குத் தாயாகவும், இருந்து ரொம்பச் செல்லமாக வளர்த்து வந்தார். குழந்தைகள் இருவரும் படு சுட்டிகள். கெட்டிக்காரர்கள். துணிச்சல் மிக்கவர்கள்.

கபிலவாஸ்து - இந்தப் பெயரைக் கேட்டதும் 'புத்தர் பிரான் அவதரித்த இடம்' என்பது உங்கள் நினைவுக்கு வரும். சித்தார்த்தரின் தாயாரான மாயா தேவியார் கபிலவாஸ்துவின் அருகிலுள்ள உலும்பினி என்ற வனத்தில் இருக்கும் போது தான் கௌதமரான புத்தர் பிறந்தார். அங்கு புராதனமான ஒரு புத்த விஹாரம் உள்ளது. அங்குள்ள ஒரு கல்வெட்டில், அந்த விஹாரத்துக்கு மன்னர் ஹர்ஷவர்த்தனர் பொன்னாலான புத்தர் சிலை ஒன்றை அளித்ததற்கான தகவல் உள்ளது. பசும் பொன்னாலான சிலை. கௌதம புத்தரின் உடைகள் கோமேதகக் கற்களாலும், வைரங்களாலும் இழைக்கப்பட்டிருந்தனவாம். அந்தச் சிலை இப்போது அங்கு இல்லை. பின் எங்கே? சீனாவில் எங்கோ இருப்பதாக ஒரு தகவல்.



கதை
வாண்டுமாமா

சித்திரம்
ரமணி..




நம் புராதனப் பொக்கிஷங்களை நம் நாட்டுக்கு உடைமையாக்கிக் கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார் புதைபொருள் ஆய்வாளரான ஹரிசரண்வர்மா. சீனாவிலுள்ள புத்தர் சிலையை மீட்டு வரும் பணியை நிறைவேற்றக் கூடிய ஒரு இளைஞனைத் தேடிப் பிடித்தார். அவனே இந்திர பால். தூதரகத்திலுள்ள கோபாலனை - இந்திரபாலுக்கு உதவும்படி கேட்டுக் கொண்டார் ஹரிசரண்வர்மா. ஆனால் துரதிர்ஷ்டம், சீனாவில் அப்போது கம்யூனிஸ்ட்களுக்கும், தேசியவாதிகளுக்குமிடையே உள்நாட்டுப் போர். கம்யூனிஸத்தின் செல்வாக்கு வலுவடைய - தேசியவாதிகள் ஒளிந்து மறைந்து விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்தனர். சீனாவில் ராணுவ ஆட்சி, அடக்குமுறை. இந்திரபாலை வேவுகாரன் என்று சீன ரகசிய போலீஸ் வேட்டையாடலாயிற்று. மரணகாயமடைந்து தப்பி ஓடி வரும் இந்திரபாலை ரவியும், நீலாவும் எதிர்பாராத விதமாகச் சந்திக்கிறார்கள் - இனி மேலே படியுங்கள்.
(இக் கதை நாம் சுதந்திரமடைந்த தருணத்தில் நடந்ததாகக் கற்பனை செய்யப்பட்டது.)
மரணம் என்னைத் தழுவுமுன், சீனர்கள் என்னைத் தொடுமுன் நான் இத்தனை பாடுபட்டுத் தேடிய இந்த ரகசியம் அவர்களிடம் சிக்காமல் உரிய இடத்தில் சேர்ப்பித்தாக வேணும்...
நீலாவும் ரவியும் தற்செயலாக எதிர்ப்படுகிறார்கள்......
ஆஹா! ஆண்டவன் என்னைக் கைவிடவில்லை. நீலா, ரவி சரியான சமயத்தில் வந்தீர்கள். அந்தப் பொம்மையை இப்படிக் கொடு நீலா.
பொம்மையின் மேல் சட்டையின் உட்புறம் தையலைப் பிரித்து அதனுள் ஒரு துண்டுக் காகிதத்தை வைத்துப் பத்திரப் படுத்துகிறான் இந்திரபால்....
பொம்மையின் சட்டைக்குள் ஒரு ரகசியக் குறிப்பு வைத்திருக்கிறேன். இதைக் கம்யூனிஸ்ட் சீனர்களிடம் சிக்காமல் நான் குறிப்பிடும் விலாசத்தில் கொண்டு போய்ச் சேர்க்க - வேணும்.


இதுதானா பிரமாதம்?
நீ நினைப்பது போல அது சுலபமல்ல.
நம் தாய் நாட்டின் பெருமையைக் காக்கும் செய்தி அதில் உள்ளது. தேசிய சீனர்கள் நமக்கு உதவுவார்கள்.
தேசிய சீனர்களைத் தான் கம்யூனிஸ்ட்கள் வேட்டையாடுகிறார்களே. அவர்களை எங்கே எப்படித் தேடுவது மாமா?
இந்த விலாசத்துக்குப் போனால், சுங் சிங் என்பவர் உதவுவார். பாரதத்தின் நண்பர் அவர்.
சீனாவில் சுங் சிங் யார் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்? ரகசியம் கை மாறிப் போனால்?
'கபிலவாஸ்து கை மாறிப் போயிற்று' என்று சொல்லுங்கள். இதைக் கேட்டதும் யார் வியப்புடன் 'தறை பிடிக்க முடிந்ததா?' என்று கேட்கிறாரோ அவரே சுங் சிங்..
மாமா.. இந்த ஆபத்தான நிலையில் நீங்கள்....
என்னைப் பற்றிய கவலை வேண்டாம். நான் உங்கள் அப்பாவிடம் தான் போகிறேன். இந்த நிலையில் எனக்கு உதவக் கூடியவர் அவர் தான்..
எங்களைக் காணாமல் அப்பா கவலைப்படுவாரே?
அவர் கவலையைப் போக்குவது என் கடமை. நீங்கள் விரைந்து செயல்படுங்கள். உங்கள் தந்தை பெருமைப்படுவார்.
பொம்மை பத்திரம். அதை யார் கையிலும் சிக்க விடாதீர்கள்..
என்னைத் தேடி வருகிறார்கள் கம்யூனிஸ்டுகள். எனக்கு நினைவு தப்பு முன் நான் கோபாலின் பாதுகாப்பில் போய் விட வேண்டும்.


இந்திர பாலின் வேண்டுகோளை நிறைவேற்றக் கிளம்பு
கிறார்கள் துணிச்சல் மிக்க நம் குழந்தைகள்...
இந்த வண்டியில் இடம் கிடைத்தால் சீக்கிரம் போகலாம்.
இந்தக் கழுதை வண்டியிலா? இதை விட வேகமாக நம்மால் நடக்க முடியும். வா அக்கா...
நகரத்தை வெளியே வந்து விட்டார்கள். களைப்பும் கால் வலியும் வேகமாகச் செயல் பட வேறு வழியைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டியது. ஒரு குடிசை வாசலில் ஒரு சைக்கிள்......
இந்தச் சைக்கிள் மட்டும் கிடைக்குமானால் இன்னும் வேகமாகப் போகலாமே.
அக்கா, ஆபத்துக்குத் தப்பில்லை வா... ஏறு சைக்கிளில்.
சைக்கிளில் ஏறிக் கிளம்பும் போது வண்டிக்குரியவன் பார்த்து விடுகிறான்.
ஏய்.. ஏய்! திருட்டுப் பசங்களா, இது என்ன வேலை?
ரவி, சைக்கிள் ரேஸில் 'எக்ஸ்பர்ட்' ஆயிற்றே. அந்த அப்பாவிச் சீனனால் எத்தனை தூரம் ஓடி வர முடியும்.....
ஆனால் அவன் ஊர்க்காவல் படையிடம் போய் முறையிட்டுக் கொண்டான்.....


சிலையைத் தேடி...
2
வழியில் இருந்த சைக்கிளில் ஏறி விரைந்த நீலாவையும் ரவியையும் சீனக் கம்யூனிஸ்ட் சிப்பாய்கள் துரத்தலானார்கள். ரவியின் கால் கெந்திற்று. அடுத்த ஊருக்குள் நுழைந்ததும் சைக்கிளை உதறிவிட்டு ஓடலானார்கள்.
ரவி, ஓடிவா. இந்த மாதாக் கோவிலுக்குள் போய் ஒளிந்து கொள்ளலாம். சீனச் சிப்பாய்கள் இங்கு வந்து சோதனையிட மாட்டார்கள்...
பாதிரியார்தான் பயப்படாதே.
குழந்தைகளே, இங்கே என்ன செய்கிறீர்கள்?
அடுத்த ஊருக்கு அவசரமாகப் போக வேண்டி இருந்தது. அதனால் வழியில் கிடந்த ஒரு சைக்கிளில் ஏறிக் கொண்டு வந்தோம். அதற்காக எங்களைச் சீனச் சிப்பாய்கள் துரத்திக் கொண்டு வருகிறார்கள். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்.
கம்யூனிஸ்ட்களின் சோதனைக்கு உட்படாத இடமே கிடையாதே. இந்தப் பெரிய 'சர்ச்சில்' நான் உபதேசப் பிரசங்கம் புரியும் 'பல்பிட்'தான் பத்திரமான இடம். அங்கு போய் ஒளிந்து கொள்ளுங்கள்.
மிக மிக நன்றி ஃபாதர்.
கர்த்தர் உங்களைக் காப்பாற்றுவாராக.


தேடி வந்த சிப்பாய்களை, நாதியுமற்று நடுவீதியில் கிடந்த சைக்கிள் வரவேற்றது....
இதோ சைக்கிள். அந்தச் சைத்தான்கள் எங்கே?
அதிக தூரம் போயிருக்க முடியாது. அவர்களைக் கண்டு பிடித்துத் தண்டித்தாக வேண்டும். திருட்டுக் கழுதைகள்!
எனக்கென்னவோ அவர்கள் நம்மிடம் சிக்குவார்களா என்று சந்தேகமாக இருக்கிறது.
அதோ அந்தச் 'சர்ச்'சுக்குள் போய்ப் பார்த்தால் என்ன?
'சர்ச்'சினுள் முழங்காலிட்டுப் பிரார்த்தித்துக் கொண்டிருந்த பாதிரியாரைத் தவிர வேறு யாருமில்லை.....
ஃபாதர், எங்களுக்காகச் சில விநாடிகள் செலவிட முடியுமா? ஒரு இந்தியச் சிறுமியும் அவள் தம்பியும் கையில் ஒரு பொம்மையுடன் இங்கு வந்தார்களா?
பிரார்த்தனைக்கு மக்கள் வருவதற்கான நேரமல்ல இது. நான் யாரையும் பார்க்கவில்லை.
அவர்களுக்கு நீங்கள் அடைக்கலம் கொடுத்திருந்தால் உமக்கு ஆபத்து தான். நினைவிருக்கட்டும்....
இந்த வேளையில் பிரசங்கம் புரியும் 'பல்பிட்'டில்..
நீலா, எனக்கு அடக்கமுடியாமல் தும்மல் வருகிறதே!
ஐயோ, தும்மி — விடாதே! சிப்பாய்கள் இன்னும் போகவில்லை. தும்மலை அடக்கு.. அடக்கு..
ஆனால் ரவியினால் தும்மலை அடக்க முடியவில்லை.....
ஹா..ச்..சூ...
அது என்ன சத்தம்..?


3
சிலையைத் தேடி...
ஃபாதர், இவர்கள் இங்கு ஒளிந்து கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியாதில்லையா?
எல்லாரையும் இழுத்து வா. அதிகாரியிடம் செல்லுவோம்.
கிராமத்தாரின் சைக்கிளைத் திருடியவர்கள் இவர்கள்தானா. இவர்களுக்கு ஒளிந்து கொள்ள இடமளித்தார் இந்தப் பாதிரியார்.
ஓ... ஒன்... னும்... மில்லே என்னுடைய பொம்மை...
ம்... ஏ, பொண்ணு! பின்னால் என்னதை ஒளித்துக் கொண்டிருக்கிறாய்?
திடீரென்று அதிகாரியின் பரிவான குரல் பயங்கரமாக மாறியது..
அது சரி, வழியில் சந்தித்தீர்களே அந்த வேவு-காரன், அவன் எங்கே?
அவர்கள் யார், எங்கிருந்து வருகிறார்கள் என்ற தகவல்களைத் தலைமையதிகாரி கேட்டார். நீலா தன் தகப்பனாரைப் பற்றிச் சொன்னாள்....
வேவு காரனு...? நாங்கள் சந்தித்தோமா...?


ஓஹோ! உங்களுக்கு ஒன்றுமே தெரியாதோ? சரி, இந்தா உன் பொம்மையை வாங்கிக் கொள். ஓர் இந்திய வேவுகாரன் எங்களிடமிருந்து தப்பி விட்டான். வேவுகாரர்கள் பிடிபட்டால் என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா? சுட்டுக் கொல்லப்படுவார்கள் நாய்களைப் போல.......
தெரியும்...
அதுவும் தெரியுமா? இந்திய தூதரகத்தைச் சேர்ந்த குழந்தைகளில்லையா! சரி, போங்கள். இனி இம்மாதிரி சைக்கிள்களைக் கடத்திக் கொண்டு ஓடாதீர்கள்....
நீலாவும் ரவியும் வெளியேறியதும் அதிகாரி கர்ஜித்தார்...
நான் இந்தப் பாதிரியாரைக் கவனித்துக் கொள்ளுகிறேன். நீ உடனே மெயிடத்துக்குப் போன் செய்து அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்று கண்காணிக்கச் சொல். அவளுக்கு அந்த வேவுகாரனைப் பற்றிய ஏதாவது தகவலும் தெரிந்திருக்க வேண்டும்.
நீலாவும் ரவியும் வேகமாகத் தெருவில் நடக்கிறார்கள்—தங்களைத் தொடர்ந்து ஓர் உருவம் வருவது தெரியாமல்......
இன்னும் ஏனக்கா உனக்குப் பயம்? பொம்மையைத்தான் அவன் சந்தேகிக்கவில்லையே.
உண்மைதான். ஆனால் நம்மீது அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது ரவி...
இந்திரபால் மாமா குறிப்பிட்ட விலாசத்துக்கு நாம் போகுமுன் நம்மை யாரும் பின் தொடரவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.
நீலா சட்டென்று ரவியை ஒரு வீட்டின் முடுக்கில் தள்ளித் தானும் ஒளிந்து எட்டிப் பார்த்தாள்...
யாரோ ஒருவன், மழைக் கோட்டணிந்து வருகிறான். அவன் நாஜிஸ்டா தேசிய வாதியா என்று தெரியவில்லை. நாம் விழிப்பாக இருக்க வேண்டும். அவனைச் சோதித்துப் பார்ப்போம்.


சிலையைத் தேடி...
4
மழைக் கோட்டணிந்த மனிதன் தங்களைப் பின் தொடருவது என்பதை அறிய முடியாதிருக்கிறார்கள். நீலாவும் ரவியும் பெரிய வீதியைக் கடந்து ஒரு சிறிய தெருவிற்குள் நுழைகிறார்கள்.
நல்ல வேளை, நம் அதிர்ஷ்டம் இருட்ட ஆரம்பித்து விட்டது.
உன் பொம்மையின் கூட்டைக்குள் ரகசியச் செய்தி இருக்கிறதென்ற சந்தேகம் யாருக்கும் வராது நீலா, பயப்படாதே.
மறுபடியும் மறைந்து ஒளிந்தபடி அவனைப் பார்க்கிறார்கள்.
அவன் இங்குதாம் வருகிறானா நீலா?
ஆமாம் நிச்சயமாக அவன் நம்மைத்தான் பின் தொடருகிறான் ரவி...
குறுகிய தெரு, சந்துகளில் நுழைந்து ஓடுகிறார்கள்...
நாம் பதுங்கிக் கொள்ள ஒரு இடத்தைத் தேடவேண்டும் ரவி.
அது ஒன்றும் கஷ்டமில்லை. இருள் நமக்கு உதவி செய்யும்.
ஊ.. ஊ.. ஊ..
அது — ரயிலின் சத்தமல்லவா? அப்படியானால்...
அருகில் ரயில் ஸ்டேஷன் இருக்கிறது. எனக்கொரு அருமையான 'ஐடியா' தோன்றுகிறது...
தூரத்தில் மழைக் கோட்டணிந்த மனிதன் பின் தொடருவதைக் கவனிக்காமலேயே, ரயில் சத்தம் வந்த திசை நோக்கி ஓடுகிறார்கள்..
அந்த ஆள் நம்மைத் தவற விட்டிருப்பானில்லையா?
இருக்கலாம். ஆனால் அந்த விலாசத்துக்கு நாம் போகுமுன் நம்மை அவன் பின் தொடரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
ரயில்வே குட்ஸ் யார்டு..! என்ன அதிர்ஷ்டம்? வா, ரவி...
மரஸ்லீப்பர்களாலான தடுப்புச் சுவரைத் தாண்டிக் குதித்தார்கள்.



நின்று கொண்டிருந்த ஒரு ரயில் வண்டியின் பெட்டிக்குள் நுழைந்தார்கள்.....
அக்கா, வண்டி காலி! நாம் ஒளிந்து கொள்ள அருமையான இடம்.
என்னுடைய 'ஜூடியா'தானே?
அதே சமயம் 'கூ' என்று தூரத்தில் எஞ்சின் ஒலித்தது. அந்த விநாடி.....
நீலா, நாம் ஏறியுள்ள வண்டி நகர ஆரம்பிக்கிறதே....
நாம் விரைவில் கீழே குதித்து விட வேண்டும் ரவி. வா..வா...
பயமும் பரபரப்பும் இதயத்தைப் படபடக்க வைக்க இருவரும் வண்டி வேகம் எடுக்கு முன் மறு பக்கத்து வழியே வெளியே குதித்தார்கள்....
இங்கிருந்து போய் விடுவோம். வேறு எங்காவது போய் ஒளிந்து கொள்ளலாம்..
அந்த மனிதருக்கு இனி நம்மைக் கண்டு – பிடிக்க முடியாது
ஆனால் திடீரென்று அவர்கள் அருகே பேச்சுக் குரல் கேட்டது......
ரவி.. இந்தச் சாமான் 'வாகனின்' அடியில் நாம் ஒண்டிக் கொள்ளலாம். இதற்கு எஞ்சின் தொத்தவில்லை. பத்திரமான இடமும் கூட...
நீலாவும் ரவியும் ஒளிந்திருந்த வண்டிக்குப் பக்கத்தில்.....
இந்தப் பிராந்தியத்தை விட்டு எந்தக் குழந்தைகளும் ஓடுவதை எங்கள் ஆட்கள் யாரும் பார்க்கவில்லையாம்.
அப்படியானால் அவர்கள் இங்கு ஏதோ வண்டிக்குள்தான் இருக்க வேண்டும். நாம் கவனமாகத் தேட வேண்டும்.
கடவுளே! அவர்கள் பார்வையில் எங்களைச் சிக்க வைக்காதே. இந்திர பால் மாமாவின் செய்தியைச் சேர்ப்பிக்கும் வரை எவ்விதமான ஆபத்தும் வரக் கூடாது. ஆண்டவா.....


சிலையைத் தேடி..
5
மழைக் கோட்டணிந்த மர்ம மனிதனின் பெயர் 'சுவாங்கி'— கம்யூனிஸ்ட் கட்சியிலும் இலாகாவில் புகழ் பெற்ற புள்ளி.
அவர்கள் போய் விட்டார்கள். ஆனாலும் நாம் கொஞ்ச நேரம் வரை இங்கேயே இருப்பது நல்லது..
நம்மிடம் ரகசியச் செய்தி இருப்பது அவர்களுக்குத் தெரிந்திருக்குமோ?
ஒரு மணி நேரம் அலைந்து தேடியும் அந்த இரு குழந்தைகளின் இருப்பிடம் தெரியவில்லை. ஆத்திரமும் அலுப்பும் அடைந்த அவன் ஸ்டேஷன் அதிகாரியை அழைக்கிறான்...
கவனமாக இரு. அந்த இரு குட்டிப்பிசாசுகளும் பற்றி ஏதாவது செய்தி கிடைத்தால் உடனே எனக்குத் தெரிவி.
அப்படியே செய்கிறேன் சார்.
மழைக்கோட்டு மனிதன் போய் விட்டான். ஆனால் ஸ்டேஷன் மாஸ்டர் விளக்குடன் இவர்கள் பதுங்குமிடம் வந்த போது நிலா திகைத்துவிட்டாள்....
அந்தச் 'சைத்தான்' போய் விட்டது குழந்தைகளே! இனி நீங்கள் வெளியே வரலாம்.
ஓ...ஓ! எங்களை எப்படிப் பயப்பட வைத்து விட்டீர்கள்!
நீங்கள் அந்த ஒன்றரை வதைப் பார்த்து விட்டு முத்தான் அந்தக் 'கம்யூன்' பேயைச் சாமர்த்தியமாக வெறு பக்கம் இழுத்துப் போனான்.
நீங்கள் ரொம்ப நல்லவர் தாத்தா.
உஷ்... ஷ்...
நல்ல மனம் படைத்த அந்த ஸ்டேஷன் அதிகாரி அவர்களைத் தம் அறைக்கு அழைத்துப் போய்....
நான் தேசியவாதி. கம்யூனிஸ்ட்களின் விரோதி. உங்கள் பசிக்குப் பாலும் ரொட்டியும் புசியுங்கள். இரவு இங்கேயே தூங்கலாம்.
உங்கள் அன்புக்கு நன்றி ஐயா.
மறுநாள் அதிகாலை அந்த அதிகாரி அவர்கள் போக வேண்டிய இடத்துக்கு வழி கூறி அனுப்பி வைத்தார்.
மிக்க வந்தனம் ஐயா. உங்களை மறக்கவே மாட்டோம்.
எச்சரிக்கையாகப் போய் வாருங்கள்....


வெகு நேரம் அலைந்து களைப்பும், அலுப்பும் கால் வலியும் கூடிய போது....
நாம் எங்கே இருக்கிறோம் என்றே தெரியவில்லை ரவி. அந்தத் தாத்தா கூறிய வழி நான் நினைத்ததை வி- ஒரே குழப்பமாக்கி— விட்டது நம்மை.
இந்திரபால் மாமா கூறிய அந்த ரகசிய சங்கேத வார்த்தை நினைவிருக்கிறதல்லவா? அதை மறந்து விடாதே.
ஆயாசமடைந்த அவர்கள் ஓர் அழகான இடத்துக்கு வந்த போது....
நீலா அக்கா! அதோ எத்தனை அழகான நீரூற்றும் தோட்டமும் பார். எனக்கு ரொம்பத் தாகமாக இருக்கிறது. வா, போகலாம்.
அந்தப் பார்க்கில் வெகு சிலரே இருந்தனர். நீலா வயதுடைய ஒரு பெண் அருகே வந்தாள்.
நான் தினமும் இங்கு வருகிறேன். உன்னைப் பார்த்ததே இல்லையே?
தினமுமா? எங்கள் உறவினர் ஒருவரைத் தேடி— இங்கு வந்தோம்.
அப்போது ரவியின் பார்வையில் தூரத்தே சீ வருவது பட்டு விடுகிறது.
நீலா.. அதோ.. அந்தக் குரூரமான ஆள். நாம் ஒளிந்து கொள்ள வேண்டும்.
குழந்தைகள் மூவரும் ஓடிச் செடி மறைவில் பதுங்கிக் கொள்ள....
ஐயோ! என் பொம்மை.... நீர்த் தொட்டியின் விளிம்பில் அதை விட்டு வந்து விட்டே- னடா ரவி....


சிலையைத் தேடி...
என் பொம்மை... அதை அவன் எடுத்துப் பார்க்கிறான்... ஐயோ, இப்போது என்னடா செய்வது ரவி?
6
நான் போகிறேன்... அந்தப் பொம்மை என்னுடையது என்று கூறுகிறேன்.
ஐயா, தயவு செய்து அந்தப் பொம்மையைத் தருகிறீர்களா? அது என்னுடையது.
உன்னுடையதா? நிச்சயமாக இது உன் பொம்மைதானா?
அப்போது அந்தப் பெண்ணின் தாயார் அங்கு வருகிறாள்......
வாங்கிங், நேரமாகி விட்டதம்மா. இதென்ன பொம்மை? எங்கே கிடைத்தது?
என்னுடையது தானம்மா. ஒரு பெரியவர் எனக்குக் கொடுத்தார்.
பொய் பேசாதே... யாரோ இந்தப் பார்க்குக்கு வந்துள்ள — குழந்தையினுடையது இது. உன்னுடைய 'ஸ்கிப்பிங்' கயிறு எங்கே?
இந்தப் பொம்மை யாருடையது என்று எனக்குத் தெரியும். என்னிடம் இதை — ஒப்படைத்தால் நான் இதை அவர்களிடம் சேர்ப்பித்து விடுவேன்.
அப்படியே செய்யுங்கள் ஐயா.
ஐயோ, இவன் ஒரு கம்யூனிஸ்ட் அதிகாரியாயிற்றே...
நான் யாரைத் தேடி அலைகிறேனோ அந்தக் குழந்தைகளுடையதுதான் இந்தப் பொம்மை. அவர்கள் இங்கு தான் மிக அருகில் இருக்க வேண்டும். எப்படியும் கண்டு பிடித்து விடுகிறேன்.
நீலா பொம்மையை எப்படியும் நாம் திரும்பப் பெற இவனைப் பின் தொடர்ந்து செல்லுவோம்.



தேசிய வாதிகள் வெறிட்டுப் பாழடைந்த தெரு வழியே நீலாவும் ரவியும் வீயைப் பின் தொடருகிறார்கள்..
அந்தப் பெண் பாவம். தன் 'ஸ்கிப்பிங்' கயிற்றை விட்டுப் போய் விட்டாள்.
அதை காப்பாற்றி வை. பயன் படும். அவன் என்ன செய்யப் போகிறான்? நம் பொம்மையை மீட்பது எப்படி?
ரவி.. எனக்கொரு யோசனை தோன்று கிறது. இப்படி அருகே வா— சொல்லு கிறேன்.
நீலாவின் திட்டப்படி ரவி, ஒரு குட்டிச் சுவர் மீது வீமின் பார்வையில் படாதபடி தயாராக நிற்கிறான். அவன் கையில்.....
ஐயோ...! உதவி.. உதவி...
என்னது..? என்ன ஆபத்து? அந்தப் பெண்..!
இந்த இடிபாடு களுக்கிடையே என் கால் சிக்கிக் கொண்டு விட்டது. விடுவித்துக் கொள்ள முடியவில்லை ஐயா!
ரவியின் குறி எப்போதுமே தவறுவதில்லை...
ஆ..வ்.. வ்..
என் ரவிக் குட்டின்னா ரவிக் குட்டி தான்! எத்தனை கச்சித மாகக் காரியத்தை முடித்து விட்டான்!
நீலா, நான் சுவரின் மீதிருக் கும் போது பார்த்தேன். ஏரா ளமான தேசிய வாதி களைக் கைதியாக்கிக் கொண்டு கம்யூனிஸ்ட் சிப்பாய்கள் இந்தப் பக்கமாக வருகிறார்கள்.


சிலையைத் தேடி...
7
ரவி. சீக்கிரம்! அந்தச் சிப்பாய்கள் இங்கு வருவதற்குள் இவனை அப்புறப் படுத்த வேண்டும்.
என்னிடம் அந்த 'ஸ்கிப்பிங்' கயிறு இருக்கிறது.
என் கைக்குட்டையால் இவன் வாயைக் கட்டுகிறேன்.
கம்யூனிஸ்ட் சிப்பாய்கள் விடுதலை வீரர்களை நீலாவும் ரவியும் ஒளிந்துள்ள இடிந்த வீட்டின் வழியே இழுத்து வருகிறார்கள்.....
பாவம் அந்த மனிதனுக்குக் காலில் கட்டு. அவனால் நடக்க முடிய வில்லை. தள்ளாடி விழப் போகிறான்....!
அந்த நாயை அப்படியே விட்டுட்டு வா. அவனைக் கவனித்துக் கொண் டிருக்க நமக்குப் பொழுதில்லை.....
எல்லோரும் போய் விட் டார்கள். நாம் அந்த ஊனமடைந்தவ—னுக்கு உதவலாம் வா, ரவி...


மெள்ள எழுந்திருங்கள் ஐயா, மயக்கம் எப்படி இருக்கிறது? நீங்கள் நினைவிழந்து விழுவதை நாங்கள் மறைவிடத்திலிருந்து பார்த்தோம்.
அவர்கள்.. அந்தக் கொடியவர்கள் போய் விட்டார்களா?
போய் விட்டார்கள். உங்கள் வீட்டுக்குப் போகலாம். மெள்ள எழுந்திருங்கள்...
அவர் தம் வீட்டுக்குப் போக நீலாவும் ரவியும் உதவுகிறார்கள்.
அதோ, அதுதான் என் வீடு.
கதவு திறந்த போது, பூங்காவில் சந்தித்த அந்தப் பெண்ணும் தாயாரும் தோன்றினார்கள்..
என் அன்பே! உங்களைக் காண்பேனா என்று தவித்துப் போனேன்.
அப்பா...!
கம்யூனிஸ்டுகள் உங்களைப் பலவந்தமாக இழுத்துப் போனதாகச் சொன்னார்கள். என் மூச்சே நின்று விட்டது!
நீங்களா? உங்கள் பொம்மை திரும்பக் கிடைத்து விட்டது போலிருக்கே?
அதே சமயம் துப்பாக்கி சூடும் சத்தமும் போர் வீரர்களின் பூட்ஸ் கால் ஒலியும் கேட்டன..
இந்தப் போராட்டம் ஓய்ந்து அமைதியான வாழ்க்கை வாழப் போகிறோமா இல்லையா?
சீக்கிரம் வீட்டினுள் போகலாம் வாருங்கள். விடுதலை வீரர்களின் போராட்டம் இன்னும் ஓயவில்லை. இறுதி மூச்சு வரை கம்யூனிஸ்ட் பேய்களை எதிர்த்தே சாவார்கள் அவர்கள்.


8
சிலையைத் தேடி...
தங்கள் பொம்மையை மீட்டது எப்படி என்பதை நீலாவும் ரவியும் வாங்லிங்கிடம் விளக்கிறார்கள்...
உன்னுடைய 'ஸ்கிப்பிங்' நமக்கு ரொம்ப உதவியாக இருந்தது..
எவ்வளவு தைரியசாலிகள்? எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கிறது.
துப்பாக்கிச் சண்டை ஓய்ந்து விட்டது. தெரு அமைதியாக இருக்கிறது. நீ அவசியம் போகத்தான் வேண்டுமா?
ஆமாம் அம்மா. ரொம்பவும் அவசரமான காரியம்.
நீலாவும் ரவியும் தாங்கள் போக வேண்டிய விலாசத்தைக் கூற, அவர்களுக்கு வழி — காட்டி அனுப்புகிறாள் அம்மூதாட்டி...
வலது பக்கம் திரும்பி, அதே பாதையில் நேராகப் போக வேண்டும். தெரிந்ததா?
பை.. பை... வெற்றி உங்களோடு இருக்கட்டும்.
கொஞ்ச நேரத்தில்..
நீலா.. அதோ நாம் தேடியலையும் தெரு அதுதான்..
குறிப்பிட்ட வீட்டினருகில் போனபோது...
எந்த வீட்டைத் தேடி வந்தோமோ அது இடிந்து கிடக்கிறதே...
விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் வீடில்லையா? கம்யூனிஸ்டுகளின் குண்டுக்கு இலக்காகி இருக்கிறது....
திடீரென்று யந்திரத் துப்பாக்கி சுடும் ஒலியோடு டாங்கி ஒன்று தோன்றுகிறது. ஒரு மனிதன் தலை தெறிக்கத் தப்பி ஓடுகிறான்..
நீலா.. இரு..இரு. சீக்கிரம் கம்யூனிஸ்ட்கள்.
ஐயோ! பொம்மை கை நழுவி விட்டதே.


நீலா பொம்மையை எடுக்கத் திரும்பவில்லை. டாங்கியைத் தொடர்ந்து சிப்பாய்களின் அணிவகுப்பு ஆர்ப்பாட்டத்துடன் வந்தது. நீலாவின் அழகிய பொம்மை நிலவானத்தை வெறிக்கப் பார்த்தபடி நடு வீதியில் மல்லாந்து கிடந்தது...
ஆ.. ஒரு பொம்மை! இங்கே இது எப்படி வந்தது?
கருணைக்கு, கலைக்கு, ரசிகத் தன்மைக்கு இடமே கிடையாது கம்யூனிஸ்ட் வாழ்விலே. இது இருக்க வேண்டிய இடம் அந்த இடிபாடுகள்தான்.
தெருவில் அமைதி ஏற்பட்ட போது....
அடே, ரவி! நாம் என்னடா செய்வது? தேடி வந்த வீடோ இடிந்து கிடக்கிறது. பொம்மையையும் இழந்து விட்டோம்.
அசடு மாதிரி அழாதியே அக்கா! பொம்மையை எப்படியும் மீட்டு விடலாம். வா, தேடிப் பார்க்கலாம்..
இதனிடையே நீலா ரவியைத் தேடிய ஜெயும் 'வீ' அணி வகுப்பை நடத்தி வரும் படைத் தலைவனைச் சந்திக்கிறான்...
அப்படி யாரையும் காணவில்லை. ஆனால் சற்றுத் தொலைவில் ஒரு பொம்மையை மட்டும் நடு வீதியில் கண்டேன். அதை எடுத்து இடிபாடுகளிடையே வீசி விட்டேன்.
நீங்கள் இந்தப் பக்கமாக வந்த போது ஓர் இந்தியப் பெண்ணையும் பையனையும் பார்த்தீர்களா? அவர்களிடம் ஒரு பொம்மை கூட இருக்கும்.
பொம்மையை வீசிய அந்த இடத்தைக் காட்ட உன் வீரர்கள் இருவரை என்னோடு அனுப்பு.


9
நீலாவும் ரவியும் இடிபாடுகளிடையே பொம்மையைத் தேடினார்கள்..
ரவிக் கண்ணு! ஜாக்கிரதை! ஏதாவது தூண் சரிந்து மேலே விழப் போகிறது.
பொம்மையை எப்படியும் கண்டு பிடித்து விடலாம் அக்கா.
அதோ.. அதோ.. உன் அழகுப் பொம்மை..
ஆமாண்டா! அதிஷ்டம் தான்.. ஆனால் அங்கே நம்மாலே போக முடியுமா? கால் வைக்கும் இடமெல்லாம் கல்லும் மரமும் கலகலத்துச் சரியுதே...
இவ் வேளையில் 'லீ' வருகிறான்..
அவர்களே தான், சந்தேகமே இல்லை! இனித் தப்ப முடியாது. நாம் அவசரப் பட வேண்டாம்.
ரவி! அவன்.. அந்த மழைக் கோட்டுக் காரன், இரண்டு பேரோடு இங்கு வருகிறான்.
ரவியும் நீலாவும் எங்கிருந்து தான் அப்படி ஒரு பலமும் துணிவும் வந்ததோ? பொம்மையை நோக்கிப் பாய்ந்தார்கள். உருண்டு, புரண்டு, சரிந்து விழுந்து பொம்மையைக் கைப்பற்றிய அதே நே-ரத்தில், இந்த அதிர்ச்சி தாங்காது தலை கவிழ்ந்து நின்றதோர் பகுதி நொறுங்கிச் சரிந்தது..
பொல பொலவென்று இடிந்து ஒரு புறம் மண் மூடிக் கூடும்....
ரவி, அதோ பார்! இடிந்து விழுந்த சுவருக்குப் பின்னால்... அதென்ன? ரகசியப் பாதையா? நாம் தப்பிச் செல்ல ஒரே மார்க்கம்.
உண்மைதான் அக்கா.. ஆனால் கும்மென்று இருட்டாயிருக்கிறதே...


படிகளைப் பார்த்து இறங்கு ரவி. ஜாக்கிரதை.
ஸியும் சிப்பாய்களும் இடிபாடுகளில் புகுந்து தேடினார்கள்..
கிடைத்தார்களா?
காணவேயில்லை. எப்படியோ மாயமாக மறைந்து விட்டார்களே..!
ஐயா, இங்கே ஏதோ சுரங்கப் பாதை போல வழி போகிறது.
சுரங்கப் பாதையா? சீக்கிரம் அதில் இறங்கித் தேடுங்கள். நாஜிப் படையினருக்கு ஏதோ தகவலோடு போகிறார்கள் அவர்கள். நாம் அதைத் தடுத்துக் கைப்பற்ற வேண்டும்.
சுரங்கப் பாதையிலே நீலாவும் ரவியும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.
ஐயையோ! சுரங்கப் பாதை இடிந்து மண் மூடிக் கிடக்கிறது. இப்போது நாம் என்ன செய்வது?
அவர்கள் வேறு நம்மைப் பின் தொடர்ந்து வருகிறார்கள். அதோ.. கேட்டாயா காலடிச் சத்தத்தை..?



சிலையைத் தேடி..
10
அடைபட்ட வழியைக் கவனிப்போடு ஆராய்ந்தார்கள் குழந்தைகள். தப்பிச் செல்ல ஏதாவது வழி புலப்படுமா என்று.
அக்கா! அதோ பார், ஒரு சின்ன இடைவெளி. முண்டியடித்து நுழைந்து அதன் வழியாகத்தான் போக வேண் டும்.
தப்பியே ஆக வேண்டும். வேறு வழியே இல்லை.
சீக்கிரம்டா, ரவி! பொம்மையைப் பத்திரமாக வைத்திருக்கிறாயா?
எத்தனை சின்ன இடைவெளி இது?
சிறிது நேரத்தில் லீயும் சிப்பாய்களும் அடைபட்ட வழிக்கு அப்பால் வந்தார்கள்...
வழி அடைபட்டுக் கிடக்கிறது. அவர்கள் இந்த இடைவெளி வழியாகத்தான் தப்பியிருக்கிறார்கள். நம்மால் இதில் நுழைய முடியாது.
'லீ' தாமதிக்க வில்லை. தன் வெறும் கைகளால் இடிபாடுகளை அகற்றலானான்....
ம்.. விரைவாகச் செயல்படுங்கள். கல்லையும் மண்ணையும் — அப்பால் தள்ளுங்கள். நாம் எப்படியும் அவர்களைப் பிடித்தேயாக வேண்டும்....
வளைந்து வளைந்து சென்ற சுரங்கப் பாதையிலே நீலாவும் ரவியும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்..
அக்கா, பாதாளத்தில்
இந்த இருண்ட சுரங்கப் பாதை ஒருவகை குழியாக இல்லை? ஏதோ சரித்திர காலத்து மர்மக் கதை போல
ரவி, பேசாமல் வா. மீதிச் சக்தியை இழக்காதே.


திடீரென்று சுரங்கப் பாதை முடிவடைந்து படிகள் மேல் நோக்கிச் செல்கின்றன.
என்ன அக்கா, இந்தப் படிகள் எங்கே...?
எங்கே போனாலும் சரி ரவி! நாம் ஏறிப் போகத்தான் வேண்டும். இனித் திரும்பிச் செல்ல முடியாது.
மேல் நோக்கிச் சென்ற பாதையின் முடிவிலே தட்டுப் பட்ட கதவைத் தொட்டுத் தள்ளிய போது மனிதர்கள் நிறைந்த ஓர் விசாலமான அறைக்குள் இருவரும் வந்தார்கள்..
என்னது...?
சுங்சிங்! எங்களை அந்தக் கம்யூனிஸ்டுகள் கைதியாக்கி இருந்தப் போன போது இவ் விரு இந்தியக் குழந்தைகளும் இடிந்த நம் வீட்டினருகில் நின்று கொண்டிருந்தார்கள்.
இவர்களுக்கு இந்த வழி எப்படித் தெரிந்தது?
விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களா நீங்கள்? கம்யூனிஸ்டுகள் எங்களை அந்தச் சுரங்க வழிமூலம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.
'சுங்சிங்'...! இந்திரபால் மாமா குறிப்பிட்ட பெயர் இதுதானா? ஒருவேளை அந்தச் 'சுங்சிங் இவர் தானா?
தலைவராகத் தோன்றிய அவன் சட்டென்று ஒரு விசையைப் பற்றி அழுத்தினான்.
தோழர்களே! நம் அபாய காலத் திட்டப்படி, சுரங்க வழியைத் தகர்த்து விட்டு நாம் இங்கிருந்து தப்பி விட வேண்டும். தயாராகுங்கள்.
(ரகசியமாக) அக்கா! அவர்கள் இவரை 'சுங் சிங்' என்று அழைத்ததைக் கவனித்தாயா? இந்திர பால் மாமா கூறிய சங்கேதக் குறிப்பை இவரிடம் கூறு பார்க்கலாம்.
சுரங்கத்தினுள்ளே.....
இந்த வேகத்தில் போனால் எந்தக் காலத்திலும் இத்தனை இடி பாடுகளையும் அகற்றி நாம் முன்னேறுவது? சீக்கிரம் விரைவாகச் செயல்படுங்கள். அந்த இரண்டு இந்தியக் கோட்டான்களையும் தப்ப விடக் கூடாது.....



சிலையைத் தேடி..
11
நீலாவும் ரவியும் நுழைந்த அறையில் இருந்தவர்கள் வெளியேறிய பிறகு 'சுங்சிங்' மட்டும் தனித்திருந்த போது நீலா கூறினாள்.....
கபிலவாஸ்து கை மாறிப் போயிற்று..
கண்டு பிடிக்க முடிந்ததா?
நீலா தாமதிக்கவில்லை. தன் பொம்மையின் சட்டையின் உட்புறமிருந்த ரகசியக் கடிதத்தை எடுத்து நீட்டினாள்.
ஐயா, தங்கள் இந்திய நண்பர் இந்திரபால் இதைத் தங்களிடம் கொடுக்கச் சொன்னார்.
'இந்திரபாலா'.. அவர் எங்கே? எப்படி இருக்கிறார் இப்போது?
'சுங்சிங்' கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போதே நீலா நிகழ்ந்ததைக் கூறினாள்..
குழந்தைகளே! முக்கியமான தகவலைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்கள் துணிவைப் பாராட்டுகிறேன்.
அதே சமயம் சுரங்கத்திலுள் 'கீ'யின் நிலை? 'சுங்சிங்' அனுப்பிய விசைக்கண்ணி வெடிகளுக்கு உயிரூட்ட.. அடுத்த வினாடி..
இனி எப்போதுமே முன்னேற முடியாதபடி சுரங்கம் தகர்ந்து மூடிக் கொண்டது.....
இது.. இது அந்த அம்பநாய்களின், விடுதலைப் படையின் வேலைதான். இருந்தாலும் விடப் போவதில்லை அந்தப் புகர்களை...


இந்திரபால் மிகத் திறமைசாலி. முதலில் நாம் இந்தக் கம்யூனிஸ்ட் களின் கண் காணிப்பிலிருந்து தப்ப வேண்டும். என் கூட்டாளிகளோடு ரேடியோ மூலம் தொடர்பு கொண்டு மேலே நடக்க வேண்டியதைத் திட்டமிடுகிறேன்....
ஐயா, நாங்கள் எங்கள் தகப்பனாரிடம் போக வேண்டும். அதற்குத் தாங்கள் உதவுவீர்களா?
கட்டாயம் உதவுவேன் குழந்தாய். உங்கள் தாய் நாட்டுக்கு மட்டுமல்ல, விடுதலைக்காகப் போராடும் எங்களுக்கும் கூட நீங்கள் மகத்தான உதவி செய்திருக்கிறீர்கள்...
'சுங் சிங்' டிரான்ஸ்மீட்டரில் கவனமாக இருந்தார்..
பதிலையே காணோமே....ஏன்? ஒரு வேளை அவர்களும் ஆபத்தில் சிக்கிவிட்டார்களோ?
எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது.
சுங் சிங்.. மிஸ்டர் சுங் சிங்....
யாரது..?
கம்யூனிஸ்ட் பட்டாளம் வீடு வீடாகப் புகுந்து சோதனை நடத்தி வருகிறது...
இனி தாமதிப்பதற்கில்லை. நம் திட்டப்படி செயல்பட வேண்டியது தான். ம்..சீக்கிரம் நம் ஆட்களுக்கு எச்சரிக்கை கொடு.


சிலையைத் தேடி....
'சுங்சிங்'கின் அறையில் சுவிட்சு அழுத்தப்பட்டதும் புத்தக அலமாரி நகர்ந்தது. ரேடியோ டிரான்ஸ்மிட்டரை எடுத்துக் கொண்டு ரவியையும் இழுத்துக் கொண்டு வந்தவன் சுரங்கப் பாதையினுள் மறைந்தான். சுங்சிங் சில நிமிஷங்களில் தன்னை ஒரு நோயுற்ற வயோதிகப் பெண்ணாக உருமாற்றிக் கொண்டார். சீனர்களுக்கே கைவந்த கலை அது........
12
என்னோடு வா தம்பி... அக்கா இங்கேயே இருக்கட்டும்.
ரவி, இந்தப் பொம்மையையும் எடுத்துப் போ. இது நம்மைக் காட்டிக் கொடுத்து விடும்.
உன் உடையையும் — மாற்று. தலையை அவிழ்த்து — விடு. மாற்று உடை உன் அறையிலேயே இருக்கும்.
பெண்ணாக மாறிய 'சுங்சிங்' படுக்கையில் கிடந்தார். கதவு தட்டப்பட்டது...
போய்க் கதவைத் திறந்து விடு...
இந்த வீட்டைச் சோதனை யிட வந்திருக்கிறோம்... ஒதுங்கி நில்...
இந்தக் கிழவியோட வீட்டை முன்பே ஒரு தடவை சோதனை போட்டிருக்கோம்பா! இங்கே ஒன்றுமிருக்காது.
யார் இந்தப் பெண்? முன்பு வந்த போது இல்லையே... சீனப் பெண்தானா?
எனக்கு உடம்பு சரியில்லை. ஆகவே உத- விக்கு வரவழைத்தேன். தூரத்து உறவு.....


சிப்பாய்கள் போய்விட்டார்கள். மறைவிடத்திலிருந்து ரவியும் அந்த மனிதனும் வெளிப்பட்டார்கள். 'சுங் திங்' அடுத்த விநாடியே டிரான்ஸ் மீட்டரை இயக்குகிறார்.........
அப்பாடா! கடைசியில் தொடர்பு கிடைத்தது.....
காலிங்... ஹியர்! சாங் எங் வாங் காலிங் சாங் எங் வாங்...
இன்றிரவுக்குள் மாவு வந்தாக வேண்டும். ரொம்ப அவசரம் அவசியமும் கூட.
சில மணி நேரத்துக்குப் பிறகு
நண்பனே! நான் இன்றிரவே நமது தலைமைச் செயலகத்துக்குப் போக வேணும். அங்கு ஏதோ அபாயமான நிலைமை என்று தெரிகிறது. மாவு தேவையாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய். இவ் விரு குழந்தைகளும் என்னோடு வருகிறார்கள்..
மாவு என்பது வெடி மருந்துக்கான சங்கேத பாஷை......
சுரங்கப் பாதையின் நம் பகுதியையும் அழித்து விடு. அந்த அறையைத் திரும்புமுன்னாக — அழித்து விடு. இனி அது பத்திரமான இடமல்ல. பிறகு சந்திப்போம்.
அக்கா மாவு என்றார்கள். லாரியில் பட்டாசு மருந்து வாசனை வந்ததைக் கவனித்தாயா?
நீங்களிருவரும் தார்ப்பாலினுக்கு அடியில் படுத்துக் கொண்டு வாருங்கள். வெளியில் என்ன நடந்தாலும் அக்கறை காட்டாதீர்கள்..
அக்கா, மெல்லத் தலையை நீட்டிப் பார்த்தேன். அங்கே.. அது.. அது லீயேதான். குட் பை மிஸ்டர் லீ.


லாரி போய்க் கொண்டிருந்தது. நெடுந்தூரப் பயணம் தான். அதன் குலுக்கலில் ரவியும் நிலாவும் தூங்கிப் போனார்கள். கண் விழித்ததும்....
அக்கா.. என்னது? நாம் எங்கேயோ போய்க் கொண்டிருக் கிறோமே...
எனக்கும் அது தான்டா கவலையாக இருக்கு..
13
லாரி செங்காவல் படையினரால் சோத னைக்கு நிறுத்தப் பட்டது...
எங்கே போகிறீர் கள்? வண்டியில் என்ன? உங்கள் அனுமதிச் சீட் டுக்களை எடுங்கள்.
நல்ல வேளை! வண் டியை மேலே போக அனுமதித்து விட்டார் கள். உள்ளே சோதனை யிட வரவில்லை. தப்பினோம்...
லாரி நின்றது. குழந்தைகள் வெளிவர 'அங்சிங்' உதவினார்......
இனி நீங்கள் வெளியே வரலாம்.
அங்சிங் மாமா! எங்கள் அப்பாவிடம் திரும்பிச் செல்ல வேண்டும். அதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்.
'அங்சிங்' அடைத்த வீட்டுக் கத வில் தங்கக முறையில் தட்டி ஒலி எழுப்பினார். லாரி போய் விட்டது.
மர்மக் கதை களில் வருவதைப் போலல்லவா இருக்கிறது. எங் கேயோ கிளம்பி எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறோமே. எப்போது அப்பா வைப் பார்க்கப் போகிறோமோ?
'அங்சிங்'! நீங்களா? வாருங்கள் ஆண் டவனுக்கு நம்மிடம் கருணை இருக்கிறது..


என்ன நடந்தது? நம் கூட்டத்தினருக்கு என்ன ஆபத்து? சொல் சீக்கிரம்..
ஏதோ விபத்து. காரணம் புரியவில்லை அந்த வீடு தகர்ந்துப் பற்றி விட்டது. என் கணவர் அங்குதான் போயிருக்கிறார் நிலையை அறிந்து வர....
மிஸ்டர் சாங்சிங்! நல்ல வேளை வந்தீர்களே. நம் விடுதலை வீரர்கள் புதுமுறைப் போராட்டத்துக்கு நாட்டு வெடி குண்டுகள் தயார் செய்து கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு விட்டது. பூமியின் கீழுள்ள சுரங்கத்திலிருந்து முக்கியமான ஒருவரை மட்டும் வெளிக் கொண்டு வர முடியவில்லை....
ஐயோ பாவம்! நான் மட்டும் உதவ முடியுமானால்..?
வா.. போகலாம். அவரையும் காப்பாற்றிவிட வேண்டும்.
சாங்சிங்கோடு தானும் வருவதாக நீலா கூறினாள். ரவி மட்டும் அவ்வீட்டிலேயே இருந்தான்.
நம் போராட்டத்துக்குப் பல விதங்களிலும் உதவியாக இருந்த அவர்தான் அடியில் சிக்கிக் கொண்டிருக்கிறார். மிகச் சிறிய இருக்கிறது அதுவும்—
இடை வெளிதான். எங்களால் அவரை முடியவில்லை.
நான் சிறியவள்.. போகிறேன். எப்படி உதவ வேண்டும்..?
சபாஷ்! இந்தியர்கள் மனிதாபிமானம்மிக்கவர்கள். கீழே சிக்கி— இருப்பதும் ஓர் இந்தியர் தான்...
ஆபத்தில் சிக்கியுள்ள மனிதருக்குக் குடிக்க நீரும், வலியைக் குறைக்க மாத்திரைகளும் நீலாவிடம் தரப்பட்டன. அவள் செயல் எப்படி என்றும் விளக்கப்பட்டது.....
அந்த மனிதரின் மீது விழுந்து அழுத்திக் கொண்டுள்ள பெரிய உத்தரத்தை இந்தக் கயிற்றில் பிணைத்து விடு.
அதன் மறுமுனையை எங்களுக்குக் கிடைக்கும்படி செய்.
ஆகட்டும் அப்படியே செய்கிறேன்.
நீலா அங்குலம் அங்குலமாகக் குறுகிய இடைவெளியில் சுரங்கத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள்.....
இந்தியராமே.. யாராக இருக்கும்? இந்திர பாலாவோ..? யாரானாலும் காப்பாற்ற வேண்டும்...
இடி பாடுகளிடையே சிக்கியுள்ள மனிதரை நீலா அணுகிய போது.....
ஐயோ! அப்பா— நீங்களா? எப்படி இங்கே வந்தீர்கள்?
கண்ணே நீலா.. நீலா..!


சிலையைத் தேடி ... 14
தந்தையை அந்த நிலையில் கண்ட நீலாவுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. மகிழ்ச்சி ஒரு பக்கம் வேதனை மறு பக்கம்....
உங்களை இப்படி இங்கு பார்ப்பேன் என்று நான் நினைக்கவேயில்லை அப்பா. இந்தக் கண்ணீரைக் குடியுங்கள். வலி தெரியாதிருக்க இதோ மாத்திரை... அப்பா, இங்கு எப்படி வந்தீர்கள்?
கண்ணே நீலா, நீ சந்தித்த இந்திரபால் என்னிடம் வந்தார். இந்திரபாலுடன் எனக்குள்ள தொடர்பு கும்பலுக்குத் தெரிந்து விட்டது. இந்திரபால் — இறந்து விட்டார். நான் அவர்களின் வேட்டைப் பொருளானேன். அவர்களிடமிருந்து தப்பத் தலைமறைவாகி ஓடி வந்தேன்.......
இந்தக் கயிற்றை உத்திரத்தோடு பிணைக்கிறேன். ரவி கூட என்னோடுதான் இருக்கிறான்.
இனி நாம் இந்த நாட்டில் பத்திரமாக இருக்க முடியாதம்மா. நாம் தாய்நாடு திரும்ப 'சுங்சிங்' உதவுவார் என்று இந்திரபால் இறக்கும் போது கூறினார். அதனால்தான் இங்கு வந்தேன் உங்களைக் காண...
நீலாவின் தந்தை கோபாலன் மூர்ச்சையடைகிறார். திட்டமிட்டபடி கயிற்றின் மறுமுனை வெளியிலிருப்பவர்களுக்குக் கிடைக்கிறது..........
சீக்கிரம்... சீக்கிரம் அதை அவிழ்த்து என் அப்பாவைக் காப்பாற்றுங்கள்...
மிஸ்டர் 'சுங்சிங்' அவர் என் அப்பா. பிழைத்துக் கொள்வாரில்லையா?
எனக்கு எல்லாம் தெரியும் குழந்தாய். உன் தகப்பனார் எங்கள் நண்பர். அவரை மீட்கத் தேடி யோசித்த போது என் தோழர்கள் எல்லாத் தகவல்களையும் கூறி விட்டார்கள்....
நீலா, ரவி! உங்கள் தைரியத்தையும் துணிவையும் எத்தனை பாராட்டினாலும் தகும். ஆனால் உங்கள் திறமைக்கும் வீரத்துக்கும் இனிமேல்தான் வேலை இருக்கிறது.



இந்திரபால் எதற்காக இங்கு வந்து தம் உயிரை விட்டாரோ அந்த வேலை இன்னும் முற்றுப் பெறவில்லை. நீலா, நீ உன் பொம்மையிலே கொண்டு வந்த செய்தி மிக முக்கியமானது. இனி நீங்கள் மேற்கொள்ளப் போகும் காரியத்துக்கு இதோ இந்தக் குறிப்புகள் உதவியாக இருக்கும். பத்திரமாக வைத்துக் கொள் ரவி.
நீலா, இந்தப் பொம்மையை எனக்குக் கொடுத்து விட்டுப் போ. உன் நினைவாக. தியாகமும் துணிவும் மிக்க இந்தியக் குழந்தைகளின் நினைவு எனக்கு இதைக் காணும் போதெல்லாம் வரும்.
குயிலவால்ஷுவின் தங்க புத்தரைப் பற்றிய செய்தியைக் கோபாலன் கூற அது நீலாவையும் ரவியையும் வியப்பிலாழ்த்துகிறது.......
தேடி வந்த சிலை சிறையில் இல்லை. அதை இங்கிருந்தும் யாரோ அப்புறப் படுத்தி விட்டார்கள். எப்போது எங்கே என்பதுதான் மர்மம். அது இலங்கையில் இருக்கலாமென்று இந்திரபால் அறிந்த செய்தி கூறுகிறது.
அதைத் தேடும் முயற்சியில் இனிப் பெரியவர்களை விட உங்கள் குழந்தைகளே ஏற்றவர்கள். பிறர் சந்தேகிக்கவும் அதிக வாய்ப்புக்கள் இருக்காது. இலங்கையில் இவர்கள் பணி தொடர வசதிகள் யாவும் நான் ஏற்பாடு செய்கிறேன். எங்கள் விருந்தாளிகளாகப் போர் இங்கு தொடர்ந்து நடக்க நீங்கள் கொஞ்ச நாள் என்னுடனேயே இருங்கள்.
கோபாலன் தம் குழந்தைகளுக்கு ஆசி கூறி அனுப்பி வைக்கிறார். அவர்கள் பயணம் மறுபடியும் லாரியில் தொடருகிறது
தங்கப் புத்தர் சிலையை நாம் மீட்போமானால்...? எத்தனை பெருமையாக இருக்கிறது தெரியுமா?
நாம் இலங்கைக்குப் போகவும் நம் தந்தை பத்திரமாக இந்தியாவுக்குத் திரும்பவும் ஆண்டவனை வேண்டிக் கொள் ரவி.
தனிமையானதோர் கடற்கரையை லாரி அடைய அங்கு தயாராக இருந்த படகில் இருவரும் ஏறிக் கொள்ளுகிறார்கள்.....
நேரப்படி வந்து விட்டோம். இன்னும் அந்தக் கப்பலைக் காண வில்லையே.
ஒரு பனிமூட்டத்திலிருந்து ஒரு கப்பல் தோன்றுகிறது.
அதோ.. அதோ ஒரு பெரிய கப்பல்.
ஆண்டவா, எங்கள் பிரயாணம் வெற்றிகரமாக முடிய வேண்டும்.
'சுங்கிங்' கப்பல் தலைவரிடம் தக்க ஏற்பாடுகள் செய்துள்ளார். இலங்கையில் அவர் குறிப்பிட்ட இடத்தில் உங்களை இறக்கி விடுவார். அங்கு உங்களை வரவேற்க எங்கள் ஆள் இருப்பான்.

நீலாவையும், ரவியையும் ஏற்றிச் சென்ற கப்பல் இலங்கைத் தீவின் கடற்கரை ஓரத்தில் நங்கூரமிடுகிறது. இவர்களை எதிர்பார்த்திருந்த படகொன்று இவர்களைக் கரை சேர்க்கிறது. குணவர்த்தனா என்ற சிங்களக் கிழவரின் விருந்தாளியாக, சுங்சிங்கிடமிருந்து தகவலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் நீலாவும், ரவியும்.

புத்தர் சிலை பற்றிய செய்திகளை இந்திரபால் ஹரிசரண் வர்மாவுக்கு முன்னமே அனுப்பி இருந்தான். அதன்படி சீனாவிலிருந்து கப்பலில் கடத்தப்பட்ட புத்தர் சிலை, வரும் போது கப்பல் புயலில் சிக்கிக் கடலில் மூழ்கியது. புத்தர் சிலையும் அத்துடன் மறைந்தது. கடலில் மூழ்கியதா? அல்லது வேறு எங்காவது அப்புறப்படுத்தப்பட்டதா? இதற்கான தகவல்களைத் திரட்டும் போது தான் இந்திரபால் குண்டுக்குப் பலியாகிறான்.

சிலையைத் தமதாக்கிக் கொள்ளத் தீவிரமாக முயன்று கொண்டிருந்த சீனர்களுக்கே கூட இந்திரபாலிடம் சிக்கிய முக்கியத் தகவல்கள் கிடைக்கவில்லை. 'லீ'யின் முயற்சிகள் தோல்வியுறவே, கம்யூனிஸ்ட் சீனரின் வேவு இலாகா, நீலா - ரவியை ரகசியமாகப் பின் தொடரும்படி ஆட்களை நியமிக்கிறது. அவர்கள் குழந்தைகளுக்கு முன்பே இலங்கைத் தீவுக்கு வந்து விட்டனர். சுங்சிங்கிற்கு இதுதெரியாமல் போயிற்று. இலங்கையிலேயோ அதை அடுத்துள்ள வேறு எங்கோ புத்தர் சிலை புதையுண்டு கிடக்கலாம் என்பதே இந்திரபால் அனுப்பிய செய்தி கூறியது. அது எங்கே?

இந்திரபாலினாலேயே விடுவிக்க முடியாத இப்புதிரை நீலாவும், ரவியும் விடுவிக்கிறார்களா? - மேலே படியுங்கள்.




கடலில் இந்தப் பக்கமாக
வரும் கப்பல்களையெல்லாம்
தன் வாயினால் ஊதி ஊதிச்
காற்றை உண்டாக்கிமூழ்
கடித்து வந்தாளாம்....
கேட்கவே பயமாக
இருக்கிறதே.
நீலா கதை கேட்டுக் கொண்டிருக்கும்
போது ஓடி வருகிறான் ரவி....
அக்கா, கடற்கரையில் ஓர் அழ
கான புதிய விசைப் படகு வந்து
பாரேன்! யாரோ அயல் நாட்டுக்
காரர்கள் போலிருக்கிறது..
இந்த ஒதுக்குப் புறமான
கடற்கரைக்கா வந்தி
ருக்கிறார்கள்?
ஒரு வேளை சுங்சிங்
நமக்கு ஏதாவது செய்தி
அனுப்பி இருப்பாரோ!
வாயேன் எதற்
கும் நீந்திச் சென்று
அருகே போய்ப் —
பார்ப்போம்..
அயல் நாட்டவர்களிடம் சிங்களச் சிறுவர்
கள் கடலுள் மூழ்கிக் காட்டும் தங்கள் திறமை
வெளிப்படுத்தக் காசுகளை நீருள் வீசச் —
சொல்லி அதை எடுத்துக் காட்டுவார்கள். இவர்
களை அப்படியாக எண்ணிவிட்டார் விசைப்
படகிலிருந்தவர்......
JALA
BUDDHA
அக்கா, முக்குளித்
துக் காசுகளை
எடுப்போமா?
படகின் பெயர் ஜல
புத்தாவாமே! புத்தர்..
அப்படியானால்... இவர்
கள் பாரத நாட்டவரா?
நீலாவும் ரவியும் நீருள்மூழ்கிக் காசுகளை எடுக்கிறார்
கள்......
படகில் இருப்பவர்
இந்தியராக இருக் —
குமோ? இந்தக் கிரா —
மத்தை நாடி வருவா
னேன்?
அதே சமயம் படகில்......
ஒஷாபா! நாம் தேடி வந்துள்ளது
இந்த ஊர்தான். அந்தக்
குறிப்பின் மர்மம் நமக்கு இங்கு
விளங்குமானால் நாம் வந்த
காரியமும் வெற்றியடையும்.


சிலையைத் தேடி...
விடைப் படகுக்கு உரியவருடன் நீலாவும் ரவியும் நெருங்கிப் பழக முதல் நாள் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால் மறுநாள் காலையில்....
அம்மா, குழந்தாய்... இங்கு ஒரு பாழடைந்த காளி கோயில் இருக்கிறதாமே உனக்குத் தெரியுமா?
தெரியுமே... அதோ அந்தக் குன்றின் மீது ஏறிப் போக வேண்டும்.
முதல் நாள் தாத்தா கூறிய கதைக்கு உரிய காளியை மறுநாள் ஒருவர் தேடி வந்தது நீலாவைத் திகைக்க வைத்தது.....
என்னக்கா, ஏதோ யோசிக்கிறாய்? நமக்கு வேண்டிய தகவல்கள் வரவில்லையே என்ற கவலையா?
அதில்லை ரவி, நேற்று நம் படகில் பார்த்தோமே அவரும் அவர் மகளும் பாழடைந்த காளி கோயிலைத் தேடி வந்திருக்கிறார்கள்.
இந்த இடிந்த காளி கோயிலில் இவர்களுக்கு என்ன இருக்கும்?
ஏதோ விசேஷமிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தனை அக்கறையாக வருவார்களா? இன்னும் அருகே போய் அவர்கள் பேச்சைக் கவனிக்கலாம் வா!
காளி கோயிலைத் தேடி வந்திருப்பவர் ஹரிசரண் வர்மாவும் அவர் செல்வ மகள் ஷோபாவும்தான். இது நீலாவுக்கும் ரவிக்கும் தெரியாது. அதே போல, தம் அருமை நண்பர் கோபாலின் குழந்தைகள்தான் இவர்கள் என்பது வர்மாவுக்கும் தெரியாது.....
ஷோபா, டைரிக் குறிப்புப்படி காளிசிலை இதுதான். ஆனால், அந்த ரகசியம்? அதுதான் விளங்கவில்லை. இக்கிராம மக்கள் சந்தேகிக்காதபடி நாம் ஆராய வேண்டும்.
கேட்டாயா ரவி? இவர்கள் ஏதோ திட்டமிட்டு இங்கு வந்திருக்கிறார்கள். புரிகிறதா?
நேரமாகி விட்டது ஷோபா. நம் படகில் போய் இந்திரபாலின் குறிப்பை இன்னொரு முறை ஆராய்வோம். ஏதாவது புலனாகிறதா பார்க்கலாம்.
நாம் நினைத்தபடி சிலையின் இருப்பிடத்தை அறிவது அத்தனை சுலபமல்ல போலிருக்கிறதே அப்பா.
அவர்கள் போன பின்பு நீலாவும் ரவியும் காளி சிலையை ஆராய்கின்றனர்...
காளிமாதாவின் உக்கிரமான கண்களைப் பார்க்கவே பயமாக இருக்கிறது. சூலத்தை உயர்த்தியுள்ள கம்பீரத்தைப் பார்.
அவர்கள் தேடி வந்திருக்கும் ரகசியம் என்னவாக இருக்கும்? எப்படியும் அதை நாம் அறிந்தாக வேண்டும் அக்கா...


அப்போது அந்தப் பாழடைந்த கோயிலில் திடீரென ஒரு குரல் ஒலித்தது...
நீங்கள் இரண்டு பேரும் இங்கே என்ன செய்கிறீர்கள்?
ஓ! நீதானா? நாங்கள் பயந்தே போய் விட்டோம். நீசா நம் கிராமத்துக்கு வந்திருக்கும் அந்தப் பணக்காரர் இந்தப் பாழடைந்த கோயிலில் ஏதோ ரகசியத்தைத் தேடி வந்தார். அவரைத் தொடர்ந்து நாங்கள் வந்தோம்.
ஏதோ ஒரு டைரியை வைத்துக் கொண்டு இந்தக் காளி சிலையிடம் எதையோ தேடிக் கொண்டிருந்தார்கள் நீசா.
நிலா, ரவி தங்கியுள்ள தலைவர்த்துக் கிழவருடன் வசிப்பவர் நீசன். அவனைத் தம் பேரன் என்று கூறிக் கொண்டார் கிழவர்....
பெரிய மனிதரைப் போலக் காணும் அவர் ஒரு மோசக்காரர். அவரிடமுள்ள அந்த டைரியில் பல ரகசியங்கள் இருக்கின்றன.
உனக்கு எப்படி அவரைப் பற்றி இவ்வளவு தெரிந்திருக்கிறது?
ஏனென்றால் பாரதத்தின் புகழ் பெற்ற புராதன புத்தர் சிலையொன்றின் இருப்பிடம் பற்றிய தகவல் அதில் இருக்கிறது. அந்தச் சிலை பொன்னாலானதும் விலை மதிப்பற்றதும். அதைத் தேடியே அவர் அலைந்து கொண்டிருக்கிறார்.
நீசன் கூறிய செய்தி நிலா ரவியை வியப்பிலாழ்த்தியது. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவனுக்கு உதவுவதாக வாக்களித்தனர். ஒருநாள் மாலை இருட்டும் நேரம்.......
எப்படியோ, அதைப் பற்றியெல்லாம் கேட்காதே. நீங்கள் எனக்கு உதவ வேண்டும். அவரிடமுள்ள அந்த டைரியை எப்படியாவது கைப்பற்றியாக வேண்டும்.
அதோ, அந்த ஹோட்டலில் அவரும் அந்தப் பெண்ணும்.. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது... ஆ! அதுதான் சரி..
ரவி, அவர்கள் அந்த ஹோட்டலில் உணவருந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீ இங்கு தாமதிக்கப் பண்ணிக் கொண்டிரு. நான் விசைப் படகுக்கு நீந்திச் சென்று அந்த டைரி கிடைக்கிறதா பார்க்கிறேன்.. என்ன?
நல்ல யோசனை தான் அக்கா.. ஆனால் ஜாக்கிரதை....
ஆண்டவா! அவர்கள் சீக்கிரம் திரும்பக் கூடாது. அந்த டைரி கிடைத்து அதில் புத்தர் சிலை பற்றிய மர்மமும் இருக்க வேண்டும்..



சிலையைத் தேடி.. 17
அந்நிய நாட்டில் தூதரகத்தில் பொறுப்பான பதவியிலி ருந்ததால் கோபால் தன் குழந்தைகளை நாகரிகச் சூழ் நிலைக்கு ஏற்றபடி வளர்த்திருந்தார். அவர்களுக்கு நீந்தத் தெரியும். நீலாவிடம் நீச்சல் உடையுமிருந்தது.
நல்ல வேளையாக 'சுங்கிங்' இந்தத் திருட்டு பயணத்துக்காக எங்களுக்கு நீச்சல் உடை களை வாங்கித் தொடுத் திருந்தார்.. அவர்கள் தாமதமாக வர வேண்டுமே.
நங்கூரச் சங்கிலியைப் பற்றிக் கொண்டு விசைப் படகின் மேல் ஏறினாள் நீலா. ஜலம் புகாத விசேஷ டார்ச் விளக்கை யும் கையோடு கொண்டு வந்திருந்தாள்.
அந்த டைரியை எங்கே வைத்திருப்பார்கள்? அதோ மேஜை.. அதன் டிராயரில்....
நீலாவின் ஊகம் வீண் போக வில்லை. டிராயரை இழுத்ததும் மேலேயே குறிப்பிட்ட டைரி இருந்தது....
DIARY
நீலமலை ஒளிப்புகழ் தென்மே காளி திரி சூலத்தை ஏந்தி நிற்கி றாள். காலைக் கதிரவன் ஒளியில் சூலத்தின் நிழல் விழும் இடத்தில் சிவன் கோயில் கருவறை பக்தர்களின் நினைக்க காரியம் கைகூடும்....
விநோதமான வர்ணனை.. விளங் காத வார்த்தைகள்.
அதேசமயம்.... ஓட்டலில்..
வா, உஷா பா.. நாம் படகுக்குத் திரும்புவோம்.
அட, ஆண்டவா! அவர்கள் கிளம் புகிறார்களே.... நீலா சிக்கிக் கொண்டாளோ?


அப்பா.. அதோ நம் படகு, அது அது என்ன? ஏதோ வெளிச்சம். நம் படகில் யாரோ...
நீலாவின் டார்ச் விளக்கின் ஒளி. அவர்கள் பார்த்து விட்டார்கள்...
துடுப்பு வலிக்கும் ஓசை... அவர்கள் திரும்பி விட்டார்களோ! நான் இங்கிருந்து போய் விட வேணும்.
அந்தப் பெண்... நமக்குக் கோமி ஆக்கு வழி சொன்னவள் அவள்தான். திருட்டுக் கழுதை..
ஜலபுத்ரா...
ஐயோ! அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டார்களே!
நீலா வெகு வேகமாக நீந்திக் கரை சேர்ந்தாள். அவளுக்காக உலர்ந்த ஆடை யுடன் ரவி காத்திருந்தான்......
நான் ரொம்பப் பயந்து போனேன் அக்கா. அங்கு ஏதாவது கிடைத்ததா?
டைரியைப் பார்த்தேன். அதில் ஒரு பக்கத்தில் காளி யுடைய இலத்தின் பெருமையைப் பற்றி எழுதி இருந்தது.
நீலா டைரியில் படித்ததை ரவியிடம் விவரித்த படி வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தாள்.
நாளைக்குக் காலை நாம் அந்தக் காளி கோயிலுக்குப் போவோம். இலத்தைப் பற்றிக் கூறியுள்ளதால் அதில் ஏதோ மர்மமிருக்க வேண்டும்.
ஆனால் அவர்கள் வீட்டை நெருங்கிய போது...
இதோ இந்தப் பெண்தான். இவளைக் கைது செய்யுங்கள். திருட்டுக் கழுதை இவள்!



சிலையைத் தேடி.. 18
நான் இல்லாத போது என் படகில் கள்ளத் தனமாகப் புகுந்தவன் அவள்தான். திருட்டுப் புத்தி...
என்னம்மா.. ஐயா சொல்றது நிசந்தானா?
நான் ஒன்னும் திருடி இல்லே.. நான் எதையும் எடுக்கவில்லை.
அந்தப் பொண்ணு அப்படியெல்லாம் செய்யக் கூடிய ... இல்லீங்க...
நீங்க சொல்லுங்க சார். உங்க படகிலே என்ன பொருள் காணாமல் போச்சு?
வந்து.. அது.. நான் சரி பார்க்கவில்லை. ஆனால் இவள் எதையோ எடுக்கத்தான் அங்கு வந்திருக்கணும்.
சித்திரம்: மணி..
ஹரிசரண் வர்மாவும் போலீஸ்காரரும் போன பிறகு....
வெளியூர்க்காரங்க படகுக்கு அவங்க இல்லாத போது போகக் கூடாதம்மா. ரொம்பத் தப்பு. இனி இப்படியெல்லாம் செய்யாதே.
சரி, தாத்தா!
அன்றிரவு நிலாவுக்குத் தூக்கமே வரவில்லை.
தங்கப் புத்தர் சிலை இந்தப் பகுதியில்தான் எங்கோ மறைக்கப் பட்டிருக்க வேணும். இந்திய நாட்டைச் சேர்ந்த அவர் அதைத் தேடித்தான் இங்கு வந்திருக்கிறார். அவர் படகின் பெயர் கூட 'ஜலபுத்தா'தானே? அப்படியிருக்குமானால்... அவருக்கு முன்னால் நான் அந்தச் சிலையின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும்.
மறு நாள் நிலா தீசனிடம் முதல் நாள் நடந்ததைக் கூறினாள்.
அண்ணா, நானும் நீயும் அந்தப் பாழடைந்த காளி கோயிலுக்குப் போய் ஆராயப் போகிறோம். அங்கு ஏதோ மர்மமிருக்க வேண்டும்.
சரியான முடிவுதான். அங்கு உங்களுக்கு ஏதாவது புதிய தகவல் கிடைத்தால் மேலும் தொடர்ந்து நீங்களாக எதுவும் செய்ய வேண்டாம். என்னிடம் வாருங்கள் என்ன?
அக்கா, இந்தத் தீசன் என்ன செய்கிறான், எங்கே போகிறான்? வீட்டிலேயே தங்குவதில்லையே.
தீசனைப் பற்றி நமக்கென்ன? என் நினைவெல்லாம் அந்த ... நாணியின் தலத்தைப் பற்றிய வர்ணனையில் தானிருக்கிறது.



காலைக் கதிரவனின் ஒளி அந்தச் சாளரத்தின் வழியாக எவ்வளவு பிரகாசமாகச் சூலத்தின் மீது பாய்கிறது?
சூரிய ஒளி... அக்கா...!
இதோ பார். சூலத்தின் நிழல்.
சூலத்தின் நிழல் விழும் இடத்தில் நின்றால் கவலைகள் மறையும். நினைத்த காரியம் கை கூடும் — இப்படித்தானே டைரியின் குறிப்புக் கூறியது அக்கா? நிழல் விழும் இந்தக் கல்லின் அடியில் ஏதோ இருக்க வேண்டும். நாம் சரியான நேரத்துக்கு இங்கே வந்திருக்கிறோம்.
உண்மைதான். நாளின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் இதன் வழியாகச் சூரிய ஒளி பாயும்.
அங்கு கிடந்த ஓர் இரும்புக் கம்பியைக் கொண்டு அந்தத் தளவரிசைக் கல்லை நெம்பித் தூக்குகிறான் ரவி.
சுலபமாக நகர்த்த முடிகிறது அக்கா.
தூக்கு.. இன்னும் கொஞ்சம்...ரவி
மில்.. இதன் கீழே
ஏதோ கருப்பாக
கிறது... என்றால்
இந்த ஆளைத் தக்
பைத் தாங்கமுடிய
வில்லையே!
பாவு கல்லின் அடியில் ஒரு தோல் பை இருந்தது. மடித்துப் போன அதனுள் ஒரு காகிதம். அதில் ஏதோ ஒரு வரை படம். தங்கள் பின்னால் ஓர் உருவம் ஒளிந்திருப்பதை அவர்கள் கவனிக்கவில்லை......
இது ஏதோ ஒரு இடத்தைக் குறிக்கும் 'மேப்' போலிருக்கிறது ரவி.
ஏய்...! இது என்னது? யாரது...
அடே ரவி
அந்த 'மேப்'
அதை யாரோ
பறித்துக்
கொண்டு வி
டார்களே

# சிலையைத் தேடி..19


நீலாவும் ரவியும் கோணிச் சாக்கிலிருந்து தங்களை
விடுவித்துக் கொண்டார்கள்......
அந்த ஆள் போய் விட்
டான். அந்தக் குறிப்புப்
படத்தையும் கொண்டு
போய் விட்டானே. அது
யார் என்று நீ பார்த்
தாயா ரவி?
இல்லையே
அக்கா.. இந்த
நீசத்தனமான
காரியத்தைச்
செய்தவன்.
இந்தப் பக்கமாகத்தான்
போயிருக்க வேண்டும்.
வா அக்கா....
பாழடைந்த கோயிலுக்கு வெளியே...
அட, அந்தப் படகுக்குச்
சொந்தக்காரரான
அந்த வட இந்தியக்
காரரும் அவர்
மகனும்...
அவர்கள்
நம்மைப்
பார்த்து
விட்டார்
கள்...
நம்மிடமிருந்து அந்த வரை
படத்தைப் பிடுங்கியது
இந்த ஆசாமியேதான்?
அவர் ஒரு மோசக்காரர்.
அவர் டைரியில் பல ரகசி
யங்களிருக்கின்றன.
பொன்னாலான புத்தர் சிலை
யைத் தேடி அலைந்து
கொண்டிருக்கிறார் என்று
தீசன் சொல்லவில்லை?
குழந்தைகள் இருவரும் நடந்ததைத் தீசனிடம்
தெரிவிக்க முடிவு செய்து அவனைத் தேடிக்—
கொண்டு போனார்கள்....
அவன் வீட்டில்
தானிருப்பான்.
தீசனின் உதவி
யில் அந்த வட
இந்தியக் காரரின்
திட்டங்களை ஓட்டை
யாக்கி விடலாம்.
குழந்தைகள் ஆச்சரியத்தோடு,
மூடிக் கிடந்த தீசனின் அறைக் கதவைப் படீ
ரென்று திறந்து கொண்டு உள்ளே நுழைந்த
போது, தீசன் திடுக்கிட்டுத் திரும்பினான். அவன்
கண்களில் கோபம் பளபளத்தது....
உங்களுக்கு என்ன துணிச்சல்? என்னை
வேவு பார்க்கவா
வந்தீர்கள்?
தீசன் மாமா! உங்
களை வேவு பார்க்க
வரவில்லை. நாங்கள்
கோயிலில் ஒரு ரகசியக் குறிப்
பைக் கண்டுபிடித்தோம். அதை
யாரோ எங்களிடமிருந்து அப


நீலா நடந்ததை விளக்கினாள்...
கரித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள் இதைச் சொல்லவே வந்தோம்.
கோயிலுக்கு வெளியே அந்த வட இந்தியர் காணப்பட்டார். அவர்தான்— அதைக் கைப்பற்றி இருக்க வேணும். இப்போது நாம் என்ன செய்வது?
உங்களுடைய ஊகம் சரிதான். இனி நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். படத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தைத் தேடி அவர் உடனே போக மாட்டார். நீங்கள் அவரைப் பார்த்து விட்டதால் எனக்கு யோசிக்க அவகாசம் தேவை. ஆனால் புத்தர் சிலையைக் காப்பாற்றுவதும் கைப்பற்றுவதும் உங்கள் ஒத்துழைப்பில்தான் இருக்கிறது. அவரைப் போய்க் கண்காணியுங்கள்.
நீதான் ஏன் அப்படி நம்மீது முதலில் எரிந்து விழுந்தாய்? 'வேவு பார்க்கவா வந்தீர்கள்?' என்று சீறினாயே, ஏன்? நம்மைக் கண்டதும் அவன் திடுக்கிட்ட மாதிரி இல்லையா? தவிர நாம் அறையுள் நுழைந்த போது எதையோ கொளுத்திக் கொண்டிருந்தானில்லையா?
அதைப் பற்றியெல்லாம் இப்போது என்னடா கவலை ரவி? நாம் விரைவாகக் கடற்கரைக்குப் போகலாம், வா........
அதோ அவர்கள் தங்கள் சிறு தோணியில் விசைப் படகை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் - நீலா. நாம் கொஞ்சம் லேட்.
ம்... நாம் செய்ய வேண்டியதைத் திட்டமிடுவோம். இருட்டும் வரை அவர்கள் இங்கிருந்து கிளம்ப மாட்டார்கள். ஐயா, நாம் கண்டுபிடித்த அந்த 'மேப்' மட்டும் நம்மிடமிருக்குமானால்...? ஆஹா..
ரவி, இரு... கொஞ்சம் நினைவு படுத்திக் கொண்டால் அந்தப் படத்திலுள்ள 'பிளான்' போலவே வரைந்து விடலாம்.
அவசரமின்றி அந்தப் படத்தை நினைவுக்குக் கொண்டு வா, அக்கா.


சிலையைத் தேடி...
— 20 —
நீலாவின் ஞாபக சக்தி அவளைக் கை விட்டு விடவில்லை.....
அந்த வரை படத்தில் இப்படித்தான் ஏதோ ஒரு குறிப்புக் காணப் பட்டது.
கடல் நீர் மலையைக் குடைந்து செய்துள்ள ஓர் அமைப்பாகத்தானிருக்க வேண்டும் இது. இம்மாதிரி அமைப்புகள் இங்கு நிறைய இருப்பதாகக் குணவர்த்தன தாத்தா கூறியிருக்கிறார்.
அன்றிரவு குழந்தைகள் 'கடல்' குடைவுப் பகுதிகளைப் பற்றிக் குணவர்த்தனவிடம் விசாரித்து அறிந்து கொள்ளுகின்றனர்.
தாத்தா நானும் ரவியும் நேற்றிரவு நீ கூறினாயே 'புலிப்பல் பாறை' அங்கு போய்ப் பார்த்து விட்டு வரப் போகிறோம். கையில் ஆகாரம் கொண்டு போகிறோம். நேரமானால் கவலைப் படாதே.
பத்திரமாகப் போய் வா. உன் குறும்புத் தனங்களை இங்கேயே விட்டுப் போ.
நீலாவும் ரவியும் தங்களை ஷோபா கண்காணிப்பதை அறியாமல் பேசியபடி போகிறார்கள்.....
அந்தப் படத்திலுள்ளது போன்ற வளைகுடாவின் அமைப்பு தாத்தா கூறியதிலிருந்து 'புலிப்பல்' பாறைக்கு அருகில்தானிருக்க வேண்டும்.
'புலிப்பல்' பாறையா...? முழு விவரமும் அறிய வேண்டும்....
அந்த 'புலிப்பல் பாறை'யில் நாம் நாடி வந்துள்ள தங்கப் புத்தர் மட்டும் கிடைக்குமானால்...? ஆகா! எத்தனை மகிழ்ச்சியாக இருக்கும்?
இவர்களும் தங்கப் புத்தரைத் தேடித்தான் போகிறார்களா? அப்பாவிடம் போய் உடனே 'புலிப்பல் பாறை' பற்றிச் சொல்ல வேண்டும்.


சற்று நேரத்தில் ஷோபாவின் படகு விசைப் படகை அடைந்தது...
என்ன ஷோபா, ஏதாவது புதிய செய்தி யுண்டா?
ஆமாம் அப்பா. அந்தப் பெண்ணுக்கும் பையனுக்கும் தங்கப் புத்தர் சிலையைப் பற்றி நிறையத் தெரிந்திருக்கிறது. 'புலிப்பல்' பாறையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் இருவரும்...
இனி நாம் தாமதிக்கக் கூடாது ஷோபா. உடனே செயல் பட வேண்டும்.
நீலாவும் ரவியும் மலை மீது போகும் ஒற்றையடிப் பாதையில் விரைந்து கொண்டிருக்கிறார்கள்.
பார்த்தால் சின்னக் குன்று போலிருந்தது. ஏற ஏறப் போய்க் கொண்டே இருக்கிறதே. நீலா ஒரு வேளை அந்த வடநாட்டுக் காரர் நமக்கு முன்னே அந்த வளை குடாவிற்கு வந்திருந்தால்...?
பார்க்கலாம்.. அவர்கள் கடல் வழியாக வரலாம். எப்படியாவது நாம் முந்திக் கொள்ள வேண்டும்.
இதே இடம் தான் அக்கா. அதோ தெரிகிறதே பாறை— பல்லைப் போல. அதனால் தான் இந்த இடத்திற்கு இப்படிப் பெயர் வந்திருக்க வேண்டும்.
விசைப் படகு கண்ணுக்குத் தெரிய வில்லை. தேடும் படலத்தை நாம் உடனே ஆரம்பிப்போம்..
நீலா, ரவி இருவரும் நீச்சல் உடை அணிந்து நீருக்கடியில் ஒளி வீசும் 'டார்ச்' விளக்குகளுடன் தயாராகிறார்கள்.
ரவி தங்கப் புத்தர் இங்கு இருக்க வேண்டுமானால் அது நீருக்கடியில் தான் எங்கோ இருக்க வேண்டும். ஆகவே நாம் கடலினுள் மூழ்கி இந்த வளைகுடா முழுவதும் தேட வேண்டும். நீ அந்தப் பக்க மாகப் போ, நான் இந்தப் பக்கம் தேடு கிறேன்.
சரி அக்கா.. ஜாக்கிரதையாகப் போ. 'விஷ் யூ குட் லக்'
நீலாவும் ரவியும் வளை குடாவை அலசிப் பார்த்துத் தேட முடிவு செய்த அதே சமயத்தில் ஹரிசரண் வர்மாவின் விசைப் படகு வேகமாக அந்தப் பகுதிக்கு விரைந்து கொண்டிருந்தது.....

# சிலையைத் தேடி.. 21



விசைப் படகு நெருங்கிக் கொண்டிருப்பதை அறியாத நீலாவும் ரவியும் நீரில் மூழ்கத் தயாராகிறார்கள்.
ரவி நீ அந்தப் பகுதி முழுவதையும் தேடிப் பார். நான் இந்தப் பக்கம் போகிறேன்..
இந்தப் பக்கத்தில் ஏதுமில்லை. ரவிக்கு ஏதாவது கிடைத்திருக்க வேண்டும். வட நாட்டுக் காரரின் கையில் அந்தச் சிலை சிக்கு முன் நான் கண்டு பிடித்து விட வேண்டும்....
சற்று நேரத்தில்...
ரவி, உனக்கு ஏதாவது தென் பட்டதா?
ஊஹூம்.. நாம் சரியான இடத்திற்குத் தானா வந்திருக்கிறோம்?
திடீரென்று அவர்கள் பார்வையில்....
ரவி, அதோ... அதோ விசைப் படகு. அந்த வட நாட்டுக் காரர் வந்து விட்டார். மறைந்து கொள்..
இதிலிருந்து அந்த வரை படத்தில் குறிப்பிட்டுள்ள இடம் இது தான் என்பது நிச்சயமாகிறது. எப்படியும் அவர்கள் நம்மைக் கண்டு விடுவார்கள்.
யாரையுமே காணோமே. அவர்கள் இங்கு தானா வந்தார்கள்? நிச்சயமாகத் தெரியுமா?
நிச்சயமாகத் தானப்பா. ஒரு வேளை அவர்கள் நீரினுள் மூழ்கி இருக்கலாம்.
வருவதை அவனிடம் கூறி இருக்க வேண்டும்.



ரவி, நாம் மறுபடியும் நீரினுள் மூழ்கித் தேடுவோம். எப்படியும் சிலையை அவர்கள் கையில் சிக்க விடக் கூடாது.
ஏதோ ஒரு கப்பல் உடைந்து மூழ்கிக் கிடக்கிறது. ஒரு வேளை தங்கப் புத்தர் சிலையைத் தீவிலிருந்து கடத்திக் கொண்டு வந்த கப்பலாக இது இருக்கக் கூடாதா?
குழந்தைகள் மறுபடி நீரினுள் மூழ்கி வெவ்வேறு திசையில் நீந்திச் சென்று தேடலானார்கள்.......
அந்த மூழ்கிக் கிடக்கும் கப்பலைச் சுற்றி, நீலா ஆராய்ந்து கொண்டிருந்த போது தூரத்தில் ஒரு நிழலுருவம் நீந்திப் போவது தெரிகிறது.
அது... அது அந்த விஷமப் படகுக்காரன் தான்... என்னைப் பார்த்து விடக் கூடாது.
நீலா வேகமாக நீரினுள் நீந்திச் சென்றாள். உடைந்த கப்பலுக்கும் ஓங்கி நின்ற கடற் பாறைச் சரிவிற்கும் இடையே....
அவர் என்னைப் பார்த்திருக்கமாட்டார். ஆனால்.. நான் எப்படி இங்கிருந்து வெளியேறுவது?
பாறைக்கு நடுவே ஒரு பெரிய இடைவெளி ஒன்று செல்லுவதைக் கவனிக்கிறாள்...
நீருக்கடியில் ஏதோ சுரங்க வழி போலிருக்கிறதே. இது எங்குதான் போகிறதென்று பார்க்கலாம்.
பாறையில் கண்ட இடைவெளியூடாக நீந்திச் சென்ற நீலாவிற்குத் திடீரென்று பீதி பற்றிக் கொள்ளுகிறது....
ஐயோ, எனக்கு மூச்சு முட்டுகிறது. என்னால் மூச்சடக்க முடியவில்லையே ஐயோ!


சிலையைத் தேடி.. 22
கடலுக்குள் மலை இடுக்குகளில் சுரங்கப் பாதை போலத் தோன்றிய நுழைவினுள்— அன்று நீலா மூச்சுக் கட்ட முடியாமல் திணறிப் போனாள். நீரின் மேல் மட்டத்தை அடையப் போரா டுகிறாள்....
என்னால் இனி தாக்குப் பிடிக்க முடியாது. வழியும் தெரியவில்லையே என்ன செய்வேன்.
திடீரென்று ஓர் இடத்தில் நீரின் வேகம் மேல் நோக்கித் தள்ளியது அவளை. வெளிச்சமும் தெரிந்தது. நீலா தன் வலிமையெல்லாம் ஒன்று திரட்டி மேல் நோக்கி உந்தி எழுந்தாள். நீருக்கு மேலே வந்து தவிப்போடு மூச்சு வாங்குகிறாள்.
ஆழ்ந்து சுவாசித்துத் தெம்பு பெற்றாள். தவிப்பும் படபடப்பும் அடங்கிய பின் சுற்று முற்றும் நோக்குகிறாள்..
பிழைத்துக் கொண்டேன். ஆனால் நான் எங்கே இருக்கிறேன்? இது எந்த இடம்? என் 'டார்ச்' நல்ல நிலையிலேயே உள்ளது.
நீர்க்குடைவுக்குள் ஒரு தனி இடம்.. வியப்பாக இருக்கிறதே. கடல் நடுவிலுள்ள மலையின் உட்பாகம் குகை போலல்லவா உள்ளது. சுத்தமான காற்று வேறு.. அதோ அங்கே மணற் பாங்கான தரை கூடத் தெரிகிறதே.
நீலா தன் 'டார்ச்' விளக்கின் உதவியால் ஆராயலானாள்...
கனவு காண்கிறேனா? இது உண்மை தானா? அப்படியும் இருக்க முடியுமா? என்னால் நம்பவே முடிய— வில்லையே...
நீலா செலுத்திய பாட்டரி ஒளிக் கதிர்கள் பட்டுப் பளபளத்துக் கொண்டிருந்தார் கடலுக் கடியி லுள்ள குகையி— னுள் வீற்றிருந்த புத்தர் பிரான்!


தவிப்போடு—தாங்கமுடியாத வியப்போடு அருகே ஓடிச் சென்று பார்த்த நீலாவின் நிலையை எப்படி வர்ணிப்பது? அவளுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது.
புத்தர்.. தங்கத்திலான புத்தர் சிலை. நான் கண்டு பிடித்து விட்டேன். ஆகா.. நான்.. நான்.. ஐயோ! இந்தச் சிலை என்ன — அழகு! எத்தகைய சாந்தம் நிறைந்த புன்னகை! ஆகா...
சீனாவிலிருந்து சிலையைக் கடத்தி வந்த கப்பல் இலங்கை அருகே வந்ததும் காளியின் உக்கிரத்தினால் கப்பல் புயலுக்குப் பலியாகியிருந்திருக்கிறது. அந்நிலையிலும் சிலை மேல் கொண்ட ஆசையால், உயிர் பிழைத்த ஒருவன் அதை இந்தக் கடல் குகைக்குள் கொண்டு வந்து பத்திரப் படுத்தி விட்டுப் போயிருக்கிறான். பிறகு அவனால் அதை மீட்க இயலவில்லை.
அவனது ரகசியக் குறிப்புகள், செய்திகள் தான் அதைத் தேடிப் பலர் அலைவதற்கு வழி செய்து தந்திருக்கிறது..............
இம் மகிழ்ச்சியைத் தம்பி ரவியோடு பகிர்ந்து கொள்ளத் துடித்த நீலா விரைந்து செயல்படலானாள்.
ரவியைக் கூட்டி வந்து காட்ட வேண்டும். பிறகு துணைவர்த்தக, நீசன் ஆகியோரின் உதவியோடு இதை இங்கிருந்து கரைக்குக் கொண்டு போக வேண்டும்.
நீரினுள் பார்த்த மர்ம உருவத்தின் நினைவு வந்தது நீலாவுக்கு. ஆனால் அதைப் பற்றிய நடயம் ஏதும் கிடைக்கவில்லை......
ரவி.. ரவி! எங்கே இருக்கிறாய் நீ?.. அவனைக் காணவில்லையே. ஏதோ ஒரு மூலையில் தேடிக் கொண்டிருப்பான்.
ரவி சென்ற பக்கம் நீந்திச் சென்றாள் நீலா.. அங்கு வளைகுடாவின் வாயிலில் விசைப் படகு நின்றிருப்பதைக் கண்டாள்....
அந்த வடநாட்டுக் காரரின் கப்பல் தான். நீரில் மூழ்கித் தேடும் சாதனங்கள் அணிந்த அந்த உருவம் கப்பலில் ஏறுகிறதே. நான் கடலுக்குள் பார்த்த உருவம் அது தானோ? ஐயோ ரவியைக் காணோமே.
வெகு நேரம் காத்திருந்தும் ரவி வரவில்லை. நீலாவைக் கவலை கௌவிக் கொண்டது.
ஒரு வேளை ரவி அவர்களிடம் சிக்கியிருப்பானோ? அவர்கள் அவனைக் கப்பலில் கட்டிப் போட்டிருப்பார்களோ? அப்படித்தானிருக்க வேண்டும். அதனால் தான் இத்தனை நேரமாகியும் ரவியைக் காணவில்லை. ரவி என்ன ஆனான் என்பதை அறிந்தாக வேண்டும்....


சிலையைத் தேடி.. 23
ரவிக்கு ஏதோ ஆபத்து என்று நீலா கலங்கிப் போயி ருந்த போது பின்னால் ஒரு குரல் கேட்டது.
ரவியைக் காணாமல் குழம்பு கிறாயா நீலா? அவன் என்னை அழைத்து வரக் கிராமத்துக்குத் வந்தான். உன்னைப் பற்றித் தான் அவன் கவலைப் படுகிறான்.
நீசா! உண்மை யிலேயே நான் ரொம்பப் பயந்து தான் போனேன்.
நீசனைத் தங்கள் தோழன் என்று நம்பிய நீலா.....
நீசா, நீ சரியான சம யத்தில் வந்தாய். அதிசயம் தெரியுமா? தங்கப் புத்தர் சிலையை நான் கண்டு பிடித்து விட்டேன்.
என்ன...நீ புத்தர் சிலையைக் கண்டு பிடித்து விட் டாயா? என்னால் நம்ப முடியவில் லையே? எங்கே?
மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் நீலா, தன் முயற்சியை யும் முடிவில் தான் கண்ட காட்சியையும் கூறு கிறாள்.
சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் சிலையைக் கண்டு பிடித்து விட்டேன். என்ன அழகு தெரியுமா? அத்தனையும் தங்கம். ரவி வரட்டும். நாம் மூவ ரும் மறுபடி அதைப் பார்க்கப் போகலாம்.
ரவி வர மாட் டான் நீலா. சிலை இருக்கு மிடத்துக்குப் — போகும் வழி யைச் சொல். என்னால் இனி அதைக் காண மல் இருக்க முடி யாது.
அறியாத நீலா நீசனைத் தான் போன பாதையில் அழைத்துப் போகிறாள்.....
ரவிக்குட்டி நீச னைக் கூட்டி வந் தது எத்தனை நல்ல தாயிற்று. சிலையை எப்படியாவது கரை சேர்த்து ஊருக்குக் கொண்டு போய் விட வேண்டும்.
இந்தப் பெண் சிலை — யைப் பார்த்தது உண்மை யானால்... இதை விட அதிர்ஷ்டம் வேறு இருக்க முடியாது.
இதே குகை தான். டார்ச் விளக்கை அடி. அதோ அந்த மூலையில் ஒரு பாறை மீது...
ஆ...! ஆமாம் தங் கப் புத்தர் சிலை தான். எத்தனையோ ஆண்டு காலம் யாருக்கும் கிடைக் காமல் மறைந்து — கிடக்கும் சிலை..
நீசன் வெறி பிடித்தவன் போல ஓடிச் சென்று சிலையைத் தொட் டுத் தட்டித் தடவிப் பார்த்தான்...
சொக்கத் தங்கம்.. அத்தனை யும் பவுன். ரத்தினங் கள், வைரங்கள். விலை மதிக்க முடியாத பொக்கி ஷம். எத்தனை அதிர்ஷ் டம்...!
என் தம் பிக்குத் — தெரிந்தால் குதித்துக் — கூத்தாடுவான்.


நீலாவின் மகிழ்ச்சியில் நீசன் பங்கு கொள்ளவில்லை
இதை இங்கிருந்து விரைவில் வெளியேற்றி விடவேண்டும். சாந்தகுமாரைக் கொண்டு வந்து மூடிக் கட்டி.... ஆஹா. அத்தனையும் தங்கம், வைரம், வைடூரியம்....!
அந்த விசைப் படகுக்காரர் வந்து ஏமாந்து போவார். நான் போய் ரவியை அழைத்து வருகிறேன். இத்தனை நேரம் அவன் வந்திருக்க மாட்டான்?
நீசன் திடீரென்று திரும்பினான்.
ரவி திரும்பி இருக்க மாட்டான். நீ இங்கிருந்து போகாதே.. நகராதே! தெரிந்ததா?
என்... ன..? நீ.. என்ன சொல்லுகிறாய் நீசா?
புரியவில்லையா இன்னும்? தங்கப் புத்தர் ஒரு புதையல். அதைப் பற்றி அதிகம் — பேருக்குத் தெரியக் கூடாது. தெரிந்ததா?
நீசா, இது என்ன பேச்சு? தங்கப் புத்தர் எங்கள் நாட்டைச் சேர்ந்தது. பாரதத்தின் புராதனப் பொக்கிஷம் இது. என்னைப் போக விடு.
பாரதத்தின் சொத்தா அது? நான் யார் தெரியுமா? கம்யூனிஸ்ட் சீனாவின் கையாள். சுங் சிங்கின் கண்ணில் மண்ணைப் போட்டு விட்டு உங்களைத் தொடர்ந்து வந்த ஒற்றன். சீனாவிலே இறந்தானே இந்திரபால் அவனுடைய எஜமானன் 'ஹரிசரண்வர்மா'தான் அந்த விசைப் படகில் இருப்பவர். இந்த உண்மையை உங்களுக்கு மறைத்தேன் — நீங்கள் அவரோடு சேர்ந்து விடக் கூடாது என்று... ஹா.. ஹா.. ஹா!
விடு.. விடு... என்னைப் போக விடு! அயோக்கியனே, உன்னை எங்கள் நண்பனாகக் கருதினோமே. வஞ்சகனே, முட்டாளே, மிருகமே!
நீலாவின் கத்தல், திமிறல் நீசனின் இரும்புப் பிடியிடம் பலிக்கவில்லை. நீலாவின் கரங்களைக் கட்டிப் போட்டான் நீசன் — சீன ஒற்றன்.
இனி உன்னால் அபாயம் ஏதுமில்லை. இங்கேயே கிட. நான் போகிறேன். ஆனால் மறுபடி வருவேன் — இந்தச் சிலையைக் கொண்டு போக. ரவி உன்னை விடுவிக்க வருவான் என்று கனவு காணாதே! அவனை இனி நீ சந்திக்கவே முடியாது, தெரிந்ததா?
ஐயோ என் ரவி! அவனை என்ன செய்தாய்? என் அருமை ரவிக்கு என்ன ஆபத்து? சொல் நீசா சொல்...!


சிலையைத் தேடி.. 24
மதிப்பற்ற புத்தர் சிலையை அங்கிருந்து அப்புறப்படுத்த ஒரு மிதவை தேவை. அதில்லாமல் அதைத் தூக்கிச் செல்ல முடியாது. அப்படியொரு சாதனத்தைக் கொண்டு வரப் புறப்பட்டான் தீசன்.
தீசா, தயவு செய்து சொல்லு. என் தம்பியை என்ன செய்தாய்?
என் திட்டங்களில் இனி நீங்கள் குறுக்கிடுவதை நான் விரும்பவே மாட்டேன் தெரிந்ததா? இனி நீயும் இங்கிருந்து வெளியேற முடியாது. நான் வருகிறேன்.
நீலா விடுவித்துக் கொள்ளப் போராடினாள். கட்டு இறுகியது. கண்ணீர் வழிந்தது.
ஐயோ! இந்த இக்கட்டிலிருந்து எனக்கு விடுதலையே கிடைக்காதோ? ரவி என்ன ஆனானோ தெரியவில்லை. தீசனை நண்பன் என்று நம்பி— மோசம் — போனேனே..
உருண்டான். புரண்டான். சோர்ந்தான். தூரத்திலே கிடந்த — உடைந்த கண்ணாடிக் குப்பி அவனுக்குப் புதிய தெம்பை அளித்தது.
அதன் அருகில் எப்படியாவது போய் விட வேண்டும். உடைந்த கண்ணாடிப் பகுதியின் கத்தி போன்ற பாகம் இந்தக் கயிற்றை அறுத்து விடும்...
இதே சமயத்தில் கடல் நீர் மோதித் தாக்கும் ஒரு சிறு பாறை மீது — ஒரு பெரும் பாறையின் மறைவில் — கை கால்கள் கட்டப்பட்டு நினைவிழந்து கிடந்தான் ரவி. அவனுக்கு நினைவு வந்த போது கட்டுகளிலிருந்து விடுபடப் பெருமுயற்சி செய்தான்.
நான் நீந்திக் கொண்டிருக்கும் போது யாரோ என் தலையில் அடித்துத் தாக்கியது நினைவிருக்கிறது. என்னைத் தாக்கியவன்தான் இப்படிக் கொண்டு வந்து இங்கு கிடத்தியிருக்க வேண்டும்... ஆனால்... ஏன் இப்படி? நீலா எங்கே...? ஆண்டவா நான் விடுதலை பெற வேண்டும்....
ரவியின் முயற்சி வீண் போகவில்லை. கைக்கட்டு நன் தெறித்து விழுந்தது.
நீலா மூழ்கிய இடத்துக்குப் போய்த் தேட வேண்டும். ஆண்டவா, அவளுக்கு அபாயம் ஏதுமில்லாதிருக்க வேண்டும். கடவுளே!
எப்போதோ ஒரு காலத்தில் மூழ்கிய கப்பல். நீலா இங்கெல்லாம் தேடி இருப்பாளா?


உடைந்த கப்பலை ரவி சுற்றிவரும் போது திடீரென்று தூரத்தில் எதிர்ப்பட்டது ஓர் உருவம்....
நீர்மூழ்கி மனிதன்! யாராக இருக்கும்? என்னைத் தாக்கித் கட்டிப் போட்டவன் இவனாக இருக்குமானால், இவன் இப்போது தேடுவது நீலாவாகத்தானிருக்க வேண்டும். நான் அதோ தெரியும் அந்தக் குகைக்குள் போய்ப் பார்க்கிறேன்.
விடுதலை முயற்சியில் தோல்வி கண்டு உடல் சோர்ந்து போகிறாள் நீலா.
நான் இங்கேயே இப்படியே இருந்தால் செத்துத்தான் போவேன். கடலுக்கடியிலே உள்ள இந்தக் குகையைப் பற்றியோ இதில் நான் இப்படிக் கட்டுண்டு கிடப்பதைப் பற்றியோ யாருக்குத் தெரியப் போகிறது?
திடீரென்று தொலைவிலுள்ள கடல் நீரில் சல சலப்பு ஏற்படுகிறது. அடுத்த வினாடி....
ரவி...!
அக்கா...! நீலா, உன்னை நான் கண்டு பிடித்து விட்டேன்!
ரவியினால் நீலாவின் கட்டுக்கள் அவிழ்க்கப் படுகின்றன.
யாரோ என்னைத் தலையில் அடித்து மயக்கமடையச் செய்து கை கால்களைக் கட்டிப் போட்டிருந்தார்கள் அக்கா. ஆனால் நான் விடுவித்துக் கொண்டு விட்டேன்.
உன்னையும் என்னையும் கட்டிப் போட்டது நீசன். அவன் நம் விரோதி. நமக்கு அது தெரியாமல் ரவி.. ரவி! தங்கப் புத்தரை அவன் கடத்திக் கொண்டு போகப் போகிறான். ஐயோ! நான் புத்தர் சிலையைக் கண்டு பிடித்ததை உன்னிடம் சொல்லவே இல்லையே. அதோ பார்...
தங்கப் புத்தரைக் கண்டு ரவி பிரமித்துப் போனான். நீலா தான் அதைக் கண்ட சாகஸங்களை விளக்கினாள்.
உன்னைத் தனியே விட்டுப் போயிருக்கிறானே தீயவனான அந்த நீசன். நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறதக்கா. நாம் இங்கிருந்து தப்பி விட வேண்டும்.
அவர்கள் திரும்பிய அதே சமயத்தில் நீரினடியில் வெளிச்சம் தெரிந்தது.
ரவி, நாம் தப்பியோட முடியாது. அதோ நீசன் திரும்பி விட்டான். அந்த வெளிச்சம் அவன் 'டார்ச்' விளக்கினுடையது தான்.


சிலையைத் தேடி...
25
அக்கா, நான் இந்தப் பாறைக்குப் பின்னால் நீருக்குள் மூழ்கியபடி மறைந்து கொள்ளுகிறேன். நீ இன்னும் கட்டுண்டிருப்பதாகவே, அதே இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டு நடி....
சரி, சீக்கிரம் போய் மறைந்து கொள் ரவி. உன் காலடி அடையாளங்களை அழித்து விடுகிறேன்.
சற்றைக்கெல்லாம் நீசன் நீரிலிருந்து வெளிப்பட்டான்—மிதவைக்காகக் கையில் சில கட்டைகள், கயிறு, சாக்கு முதலியவற்றுடன்...
ம்... அங்கேயே இருக்கிறாயா? பலே! உன்னைச் சரியாகக் கட்டினேனோ இல்லையோ என்று குழம்பிக் கொண்டிருந்தேன். நல்ல வேளை...
இயற்கையாக நடிக்க வேண்டும். அவன் சந்தேகப் படக் கூடாது.
நீசா, உன் கட்டுக்களால் என் கை வலி உயிர் போகிறது. அவிழ்த்து விடேன்.
கொஞ்ச நேரத்தில் வலி மரத்துப் போகும். புலம்பாமலிரு. தப்பிக்கச் சூழ்ச்சி ஏதும் செய்யாதே.
என்னால் நகரவே முடியவில்லை. நீசா, எனக்குக் கருணை காட்டு!
கருணை...? ஹ...ஹ...ஹா! முட்டாள் இந்தியப் பெண்ணே! அந்த விசைப்படகு கூட இந்தியப் பணக்காரர், நீ உன் தம்பி எல்லோருக்கும் 'டாடா'! இந்தச் சிலை மறுபடி சீனாவுக்குப் பயணமாகிறது. எனக்குப் பெருந்தொகை பணமாகக் கிடைக்கப் போகிறது. குட் பை!
அடப்பாவி... கைக் கூலி!
நீசன் சென்ற சிறிது நேரத்துக்குப் பிறகு நிலாவும் ரவியும் நீரினுள் மூழ்கி ஓசையின்றி நீசனைப் பின் தொடர்ந்தனர்...


கடலுக்குமேல் மட்டத்தில் நீட்டி நிற்கும் பாறைகளுக்கு நடுவே ஒரு மறைவிடத்தில் புத்தர் சிலையைச் சுற்றிய சாக்குமூட்டை பத்திரப் படுத்தி இருப்பதைக் கண்டார்கள். ஆனால் அது
இதை இங்கேயே இப்படியே விட்டுத் தான் போக வேண்டும். இதைத் தூக்க எங்களால் ஆகாது. ரொம்பக் கனம். நீ-சன் இதை எடுத்துச் செல்லப் படகு கொண்டு வரத்தான் போயிருக்க வேண்டும்.
நீர் மட்டத்துக்கு மேலே வந்ததும் குழந்தைகள் இருவரும் சிறிது நேரம் ஆழ்ந்து சுவாசித்துத் தெம்பு பெற்றார்கள். இதற்குள் மாலை மங்கி இருள் கவியலாயிற்று. பிறகு.....
அக்கா, நாம் இப்போது செய்ய வேண்டியது என்ன? அந்தச் சிலையை நீ-சன் கொண்டு போக விடக் கூடாது...
ரவி, யாரை நாம் விரோதியாக எண்ணிச் சந்தேகித்தோமோ அவர் தான் இப்போது நமக்கு உதவ வேண்டும். அப்பா குறிப்பிட்ட ஹரிசரண் வர்மா — இந்திர பாலைச் சிறைக்கு அனுப்பியவர் — இவர் தானாம். இதைத் நீ-சன் கூறினான். அதோ விசைப் படகு. நீந்திச் செல்வோம்.
அக்கா, அதோ... அதோ பார். விசைப் படகு நகருகிறது. அது கிளம்பி விட்டது.
வளைகுடாவை நீந்திக் கடந்து பாறை மீது ஏறி மலையுச்சிக்குச் சென்று நமது டார்ச் விளக்கின் உதவியால் அவர்கள் கவனத்தைக் கவர வேண்டும். வா, சீக்கிரம்.
நெஞ்சு தாளமிடத் தவிப்புடன் படாத பாடு பட்டுப் பாறைகளில் தாவி ஏறினார்கள்.
ரவி, புயல் வரும் போலிருக்கிறது. வானம் இருண்டு வருகிறது. அதனால் தான் அவர்கள் வேகமாகக் கிளம்பிப் போகிறார்கள். இந்த அவசரத்தில் நம் 'டார்ச்' வெளிச்சத்தையா அவர்கள் பார்க்கப் போகிறார்கள்?
அதோ.. அதோ படகு. ரவி, நீ 'சிக்னல்' பயிற்சி பெற்றாயே நினைவிருக்கிறதா? 'எஸ்.ஓ.எஸ்.' என்று 'மோர்ஸ்' முறையில் செய்தி அனுப்பு. பளிச் பளிச் என்று துரிதமாக மூன்று முறையும் நீண்ட இடைவெளி விட்டு மூன்று முறையும் மறுபடி துரிதமாக மூன்று முறை. சிக்னல் கொடு சீக்கிரம்.


காற்றும் கன மழையும் வர வர வலுத்துக் கொண்டிருந்தன. தினவர்த்தனத் தாத்தா சொன்ன காளிதேவியின் கதை நினைவுக்கு வந்தது நீலாவுக்கு. 'ஊ' என்று காற்று ஊளையிடலாயிற்று....
ரவி 'சிக்னல்' இதுதான். நீசன் அந்தச் சிலையைக் கொண்டு போக விடக் கூடாது.
நம் டார்ச் விளக்கின் ஒளி அறிவிப்பை அவர்கள் பார்க்காவிட்டால், இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தக் காற்றில் நாம் கிழித்து எறியப் படுவோம் அக்கா.
சிலையைத் தேடி...
26
விசைப் படகில்...
அப்பா, துறைமுகத்துக்குப் போய்விட முடியுமா? காற்று பலமாகிக் கொண்டிருக்கிறதே. அப்பா!.. அதோ அந்தக் குன்றின் மேலே பாருங்கள்.
ஆமாம்.. யாரோ உதவி வேண்டி 'சிக்னல்' தருகிறார்கள். நாம் அவர்களுக்கு உதவத்தான் வேண்டும். ஷோபா, உன் டார்ச் விளக்கை எடுத்து அவர்களுக்குப் பதில் 'சிக்னல்' கொடு பார்க்கலாம்.
ஹரிசரண் வர்மா விசைப் படகைத் திருப்பி அந்தக் குன்றின் அருகே கொண்டு போனார்.
அப்பா, அவர்கள் இரண்டு பேர் என்று தெரிகிறது. இறங்கி வருகிறார்கள். அவர்கள் யார்? ஏன் அங்கே போனார்கள்?..
அவர்களால் எப்படி இந்தச் சீறும் புயல் காற்றில் நம் படகை அடைய முடியும்? என்றால் இதற்கு மேல் இந்தக் கொந்தளிக்கும் கடலில் அந்த இடத்தை நெருங்க முடியாது. நான் நங்கூரமிடுகிறேன்....
பளிரென்று ஒரு மின்னல் கொடி அந்தப் பிராந்திய முழுவதையும் ஒளி வெள்ளத்தில் மூழ்கடித்து மறைகிறது.
அது... அப்பா அவர்கள்.. அந்த அக்காவும் தம்பியும் தான். நம் படகை நோக்கி நீந்தி வருகிறார்கள்...
நீந்தியா? முடியக் கூடிய காரியமா? நம் சிறு படகை இறக்கி அதில் போய் அவர்களை நான் மீட்டு வருகிறேன். நீ இதைக் கவனித்துக் கொள்.
நெடிதுயர்ந்து நின்ற பாறையின் மறுபக்கத்தில் ஒரு விசைப் படகு கடல் நீரையும் புயல் காற்றையும் கிழித்துக் கொண்டு புத்தர் சிலை வைக்கப் பட்டிருந்த பாறையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதில் நீசனும் ஒரு சீனக் கம்யூனிஸ்டும் இருந்தனர்...
படாத பாடு பட்டுச் சிலையைக் கைப்பற்றி விட்டேன். அதோ நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.. இந்தப் புயல் என்ன செய்யும்?
அந்தத் தங்கச் சிலையை என் கண்ணால் காண வேண்டும்.


வர்மா தன் தோணியை லாகவமாகப் பாறைகளுக்கிடையே குறுக்குப் போட்டுச் செலுத்திக் கொண்டு அவர்கள் அருகே போனார்.
இப்படிக் கை கொடு நீலா. நீ படகுக்குள் வர நான் உதவுகிறேன்.
பத்திரம்.. இந்த வேளையில் நீந்தலாமா? முட்டாள்களா? முடியுமா? அசட்டுத் துணிச்சல்.
விசைப் படகில் வந்து விழுந்ததும் நீலா கதறி விட்டாள்...
வர்மா படகை லாகவமாக இயக்கி நீலா குறிப்பிட்ட இடத்துக்குத் திருப்பினார்.
நாங்கள் நினைத்தோம் நீங்கள் தங்கள் உளவாளிகள் என்று. கோபாலனின் குழந்தைகள் என்பதைக் கேட்க எனக்கு எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது!
அதோ பார்.
அதோ... அதோ! அந்தப் படகில் நீசன் போகிறான். மாமா சீக்கிரம் அவர்களைப் பின் தொடருங்கள்.


சிலையைத் தேடி ...
27
அவர்கள் தப்பி விட்டார்கள். அவர்களோடு அந்தப் புத்தர் சிலையும் போகிறதே, ஐயோ!
அந்தச் சின்னப் படகு வேகமாகப் போகலாம். ஆனால் இந்தக் கடலில் அதனால் அதிக தூரம் போகமுடியாது. நாம் அவர்களைப் பிடித்து விடலாம், கவலைப் படாதே.
ஹரிசரண் வர்மாவின் பெரிய விசைப் படகு வேகமாக விரைந்தது. ஆனால் அதே சமயம் புயலின் உக்கிரமும் அதிகமாயிற்று. இருள் — மூண்டது......
அந்தப் பக்கமாக... அந்தச் சதிகாரர்களின் படகை அங்குதான் பார்த்தேன். காற்று கடல் நீரை வாரி வீசுகிறதே... எதுவுமே தெரியவில்லையே.
மலை போல எழும் கடல் அலைகளினூடே, அந்தப் படகை அன்னம் போல மிதந்து செல்லும்படி ஓட்டினார் திறமையுடன் ஹரிசரண் வர்மா.
ஆனாலும் அந்தப் பயங்கரப் புயலில் அதிக நேரம் திசை தெரியாமல் தவிக்க முடியாதென்பதை உணர்ந்த வர்மா தம் மகனுக்குக் கட்டளையிட்டார்...
ஷோபா, கரையிலிருந்து உதவி கோரி அந்த ராக்கெட்டுகளைக் கொளுத்தி விடு. அந்த ஆகாச வாணங்கள் நமக்குப் பக்கபலமாகத் தக்க உதவியுடன் படகுகளை அனுப்பி வைக்கும்!
ஷோபா கொளுத்தி விட்ட ஆகாச வாணங்கள் வானத்திலே ஒளி சிந்தி உதவி கேட்டு நின்றன.
அதோ... ஆபத்துக்கால ஆகாச வாணம்! யாரோ கடலில் புயலில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்... வாருங்கள் மீட்புப் படகுகளோடு விரைவோம்.
நடுக்கடலில், புயல் நடுவில் தீரனின் விசைப் படகு சங்கடத்துக்குள்ளாகியது.
சீக்கிரம்! எஞ்சினில் என்ன கோளாறு? சனியன். நல்ல சமயத்தில்...
மோட்டார் இயங்க வில்லை. எங்கோ அடைப்பு ஏற்பட்டிருக்கிறது...


முட்டாள்! நல்ல படகாகக் கொண்டு வரக் கூடாது. ஏதாவது செய்து ஓட்டவை. நாம் சீக்கிரம் எஞ்சினை ஓட்டப் பார்.
அதோ அவர்கள் படகு...
இருவரும் கையை உயர்த்தி அசைக்கிறார்கள்.....
அந்தப் படகின் மோட்டார் எஞ்சின் கெட்டிருக்க வேண்டும். அலைகள் அதைப் பாறையை நோக்கித் தள்ளிக் கொண்டு போகிறது.
இனி அது ஓடாது.. நாம் ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டோம். அலைகள் நம் படகைப் பந்தாடி மூழ்கடிக்கும். அல்லது பாறைகளில் கொண்டு போய் மோதி உடைக்கும்.
அந்தப் பாழடைந்த கோவிலிலுள்ள காளி மாதாவின் செயல்தான் இது. உங்கள் படகை அவர்கள் அருகே எந்தளவு தூரம் கொண்டு போக முடியுமோ கொண்டு போங்கள் மாமா. நான் இந்தக் கயிற்றை என் இடையில் கட்டிக்கொண்டு கடலில் குதித்து நீந்தப் போகிறேன். அவர்களிடமிருக்கும் அந்தக் கயிற்றைக் கைப்பற்ற இதைத் தவிர வேறு மார்க்கமில்லை.
அக்கா..! வேண்டாம். ஐயோ, இது ரொம்ப அபாயம்..
நீலா தயங்கவில்லை. நீந்தலில் கெட்டிக்காரி அவள். துணிச்சல் மிக்கவளும் கூட...
கவலைப் படாதே ஷோபா! அவள் இடையில் கட்டிக் கொண்டிருக்கும் கயிறு அவளைக் காப்பாற்றும்..
அக்கா! ஐயோ, உன்னைக் கடல் விழுங்கி விடப் போகிறது...
அவர்கள் தீயவர்கள், கொடியவர்கள், அயோக்கியர்கள். ஆனாலும் என் கண்ணெதிரே அவர்கள் கடலுக்கு இரையாவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? காப்பாற்றத் தான் வேண்டும்....


ஆனால் விதி வேறு விதமாக நினைத்திருக்கும் போது நீலாவின் நல்லெண்ணப்படி நடக்குமா? நீரஜனின் படகு கடலின் கோபத்துக்குப் பாத்திரமாயிற்று. அடித்தளத்திலிருந்து சுருண்டெழுந்த கோர பேரலை, நீரஜனைப் படகொடு பந்தாடி ஒரு பாறையில் கொண்டு போய் மோதியது......
ஐயோ, என்ன பயங் கரம்! படகு தூளாகி விட்டதே. நீரஜனும், சீலாவும் — ஐயோ என்ன கோரம்.. புத்தர் சிலையையுமல்லவா கடல் கொண்டு விட்டது. தாயே, காளிமாதா! உன் கோபத்துக்கு அவர்களைப் பலி கொண்டது போதும். எங்களைக் காப்பாற்று அம்மா!
புயல் உக்கிர நிலையை அடைந்தது. உதவிக்குப் படகுகள் விரைந்து வந்தன. கயிற்றைப் பற்றி இழுத்து நீலாவைக் காப்பாற்றினார்கள்.
புயல் ஓய்ந்து அமைதியாகப் பொழுது விடிந்த போது அடக்க முடியாத ஆவலோடு நீலாவும், ரவியும் சிலை மூழ்கிய இடத்துக்குப் போகிறார்கள் படகில்..
நீரஜனின் படகு அந்தப் பாறையில் மோதித் தான் தூளாயிற்று. அதனால் சிலை இங்குதான் எங்காவது கடலடியில் கிடக்கும்.
கொடியவர்களுக்கு ஏற்ற தண்டனையைக் கடவுள் கொடுத்து விட்டார். ஆனால் கடவுள் சிலை நமக்குக் கிடைக் குமா?
நீலா, ரவி இருவரும் மூழ்கி மூழ்கித் தேடுகிறார்கள். கடல் கொண்ட சிலையைக் காணவே யில்லை. ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள்...
எத்தனை தேடியும் எதுவும் கிடைக்க வில்லை மாமா, ரொம்ப ஏமாற்றம்
அதே இடந் தான்... மின்னல் ஒளியில் மனித உடல் கள் பிய்ந்து எறியப்பட் டதையும் சிலை மூட்டை எதிரில் விழுவதையும் கண்டேன். ஆனால் இப்போது கிடைக் கவே இல்லையே.
புத்தர் பிரானுக்குத் தம் நாட்டுக்குத் திரும்ப மனமில்லை. அவரைக் காணும் பாக்கியத்தையாவது நீங்கள் பெற்றீர்கள். அது கூட எனக்குக் கிட்டவில்லை. இந்தியாவிலிருந்து செய்தி வந்திருக்கிறது. உங்கள் தந்தை 'கேபிள்' அனுப்பி இருக்கிறார்....
உடல் நலம் பெற்றுத் தாயகம் திரும்பி இருந்தார் கோபால். அவர் கொடுத்த தகவல்களை வைத்து, இந்தியப் பத்திரிகைகளெல்லாம் நீலா, ரவியின் சாகசங்களைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாயின. அவர்கள் வரவை ஆர்வத்தோடு எதிர் பார்த்துக் காத்திருந்தது பாரதம்....
அதோ பார் துறைமுகத்தில்! நம்மை வரவேற்க எத்தனை கூட்டம்!
அந்தக் கூட்டத் தில் நம் அப்பா இருப்பாரா? ஆண் டவா, இருக்க வேண் டுமே எங்கள் அப்பா!
குழந்தைகளைக் கோபால் ஓடிச் சென்று தாவி அணைத்துக் கொண்டார். இலங்கையில் நடந்ததெல்லாம் இங்கு எல்லோருக்கும் தெரிந்திருக்கவே வரவேற்புப் பிரமாதமாக இருந்தது.
வீரசிகாமணிகளே! வருக... வருக...!
உங்கள் சாகசச் செயல்களைப் பாராட்டி நம் பாரத அரசு உங் களுக்குப் பதக்கம்
நீலா..ரவி.. வாழ்க..! வாழ்க..!

ஓ ... ஓநாய்க் கோட்டை! அப்பப்பா... எத்தனை விறுவிறுப்பு. எவ்வளவு திருப்பங்கள்... அதோடு ஆனந்தனும், கந்தனும் செய்யும் சாகஸங்கள்... அற்புதம். அபாரம். அமர்க்களம்.

—ஜி.கே.வெண்ணிலா, சென்னை-15

சிறு வயதில் எங்கள் தந்தையிடம் அடம் பிடித்து 'கல்கி வாங்கும்படி கூறுவோம். காரணம், வாண்டு மாமாவின் பவழத் தீவு - ஓநாய்க் கோட்டை - மூன்று மந்திரவாதிகள் - நெட்டையன் - குட்டையன் கதை ஆகிவற்றைப் படிக்க. பெரியவனான பிறகும் மறுபடி வாண்டுமாமாவின் கதைகளைப் படிப்பதில் அந்த ஆர்வ தீவிரம் குறையவில்லை.

—கோ.தீபா, காட்பாடி

பார்வதி சித்திரக் கதை வரிசையில் பவழத் தீவு, ஓநாய்க் கோட்டை ஆகிய இரு கதைகளையும் படித்து மகிழ்ந்தோம். ஏற்கனவே நாங்கள் படித்த கதைகளாயினும் எங்களை மீண்டும் படிக்கத் தூண்டிய இக் கதைகள் எங்கள் குழந்தைகளையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தின. ஆனால், ஒரு சின்னக் குறை. இவ்வளவு சிறப்பான இக் கதைகள் ஏற்கனவே வந்த அளவை விட, சிறியதாக வெளியிடுவதால் படங்களும் எழுத்துக்களும் தெளிவாக அமையவில்லை.

—வி.ராமகிருஷ்ணன், நாமக்கல்

எனக்குக் கிடைத்த வாண்டு மாமாவின் பவளத் தீவு, ஓநாய்க் கோட்டை இரண்டு புக்கையும் பைண்ட் செய்து பத்திரமாக வைத்திருக்கிறேன். அடுத்தப் பொக்கிஷத்திற்கு ஒரு மாதமா காத்திருக்க வேண்டும்? முடியாது. மாதமிருமுறை வெளியிட அன்புடன் வேண்டுகிறோம்.

—கே.ஏ.ஆர்.பரமசிவம், சேலம்-6

ஓநாய்க் கோட்டை படித்தேன். ஒரு வேண்டுகோள். தயவு செய்து ரொம்பவும் பொடி எழுத்துக்களில் வெளியிடாதீர்கள். படிக்கச் சிரமமாக இருக்கிறது. கண்கெட்டு விடாதா?

—ஆர்.ரங்கராஜன், மதுரை-3

காமிக்ஸ் உலகில் வாண்டு மாமா எழுதிய பவளத் தீவு அருமை.

—எம்.சோமசுந்தரம், தருமபுரி

இன்றையச் சூழலில் பார்வதி சித்திரக் கதைகள் தரமானதாக உள்ளன. எல்லாப் பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்குக் கட்டாயம் வாங்கிக் கொடுத்துப் பயனை அடையச் செய்யலாம். காரணம், டி.வி. வீடியோ அதிகம் பார்ப்பதால் மூளை மந்தம் அடைவதாக எங்கோ படித்த நினைவு!

—எம்.சுகுமார், பாம்பே-17

சிறு வயதில் கல்கியில் நாங்கள் படித்து மகிழ்ந்த வாண்டு மாமாவின் சித்திரக் கதைகள் இப்பொழுது எங்கள் குழந்தைகளும் படித்து மகிழும் வகையில் பார்வதி சித்திரக் கதைகளாக வெளிவரத் துவங்கியிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. மாதம் இரு முறையாக இருந்தால் சிறப்பாக இருக்கும். எழுத்துக்கள் இன்னும் சற்றுப் பெரியதாக இருக்கலாம். ஓநாய்க் கோட்டையை அடுத்து 'வீர விஜயன்' கதையை வெளியிடுங்கள்.

—ஆர்.ரங்கராஜன், மதுரை

ஜூலை வெளியீடு மூன்று மந்திரவாதிகள் - என்று விளம்பரப்படுத்தியுள்ளீர்கள். ஆனால் ஆகஸ்ட்டில் தான் சித்திரக் கதை-2 ஓநாய்க் கோட்டையே கிடைத்தது. ஏன் இவ்வளவு கால தாமதம்?

—எஸ்.எஸ்.ஆர்., நெல்லிக்குப்பம்

வழக்கமான நாவல்களையே படித்துப் போரடித்துப் போன எனக்கு, வாண்டு அங்கிளின் சித்திரக் கதை ஒரு வரப்பிரசாதம். இனித் தொடர்ந்து வாங்குவது என முடிவு செய்து விட்டேன். ரியலி சூப்பர்!

—ரவிபாலாஜி, சேலம்-1

எங்கள் அப்பா படித்து ரசித்த 'வீரவிஜயன், மரகதச் சிலை' எப்பொழுது வெளியிடப் போகிறீர்கள்? எங்கள் அப்பா அதைப் பற்றிச் சொல்லச் சொல்ல அதைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்குகிறது.

—சி.வி.நரேந்திரபாரதி, சென்னை-5












**1.** இங்கு நோபல் பரிசு பெற்ற ஐந்து பேர்களைப் பார்க்கிறீர்கள். பரிசு பெற்ற ஆண்டுகளும் தரப்பட்டுள்ளன. ஆனால், அச்சுக் கோர்ப்பவர் செய்த குளறுபடியினால் வருடங்கள் தாறுமாறாக உள்ளன. யார் - எந்த ஆண்டில் நோபல் பரிசு பெற்றார் என்பதைச் சரியாக்கிக் கூற முடியுமா?




**2.** இங்கு சில மிருகங்களும் அவற்றுக்குப் பிடித்தமான உணவுகளும் தரப்பட்டுள்ளன. எந்த மிருகத்துக்கான உணவு எது என்று கூறுங்கள் பார்க்கலாம்.

# மூளைக்கு வேலை


1. கைலாச நாதர் ஆலயம்


2. பெரிய பௌத்த ஸ்தூபம்

C. எல்லோரா
D. காஞ்சி


3. ஹரிமந்திர்


4. ஏரி அரண்மனை.

**3.** இங்கு பாரதத்தின் நான்கு புகழ் பெற்ற நினைவுச் சின்னங்கள் உள்ளன. இவை எந்த இடத்தில் உள்ளன என்று கூற முடியுமா?

---

1. A-1, B-5, C-4, D-3, E-1)
2. A-2, B-4, C-5, D-3, E-1)
3. A-3, B-4, C-1, D-2




சித்திரக் கதை
அரசனும் அடிமையும்
கதை: கௌசிகன் - படம்: விஜூ
டில்லி அரியணையிலே அடிமை வம்சம் ஆட்சி செலுத்தி வந்த காலம் அது. சுல்தானா ரஸியா வின் தந்தையான அல்தமிஷின் ஆட்சி. சுல்தான் நூறு அடிமைகளை விலைக்கு வாங்க இருந்தார். அடிமைகள் மன்னரின் பார்வைக்கு வந்த போது.....
அந்த ஒரு அடிமையைத் தவிர மற்றவர்களை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம்.
நிராகரிக்கப்பட்ட அந்த அடிமை உக்க...
ஷாயன்ஷா! என்னையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.
உன்னை நான் வாங்கி என்ன செய்ய? பலமற்ற நீ எனக்குப் பயன்பட மாட்டாய்.
ஆலம்பனா, இந்த அடிமைகளையும் யாருக்காக வாங்குகிறீர்கள்?
ஏன்? எனக்காகத் தான்!
அப்படியானால் இந்த ஏழையை அல்லாஹ்வின் அடிமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.
அல்லாஹ்... ஆண்டவன்... ம்... உண்மைதான்..! இந்த அடிமையை ஏற்று வஸீர், மஜீத்யின் நந்தவனத்துக்கு நீர் ஊற்றும் பணியாளனாக்குங்கள்.
உடல் பலமற்ற உக்கை மற்ற அடிமைகள் அலட்சியப் படுத்தித் தங்கள் பணிகளையும் அவன் மீது சுமத்திவிட்டுத் தாங்கள் சொகுசாக வாழ்ந்தார்கள். சுல்தான் அல்தமிஷும் உக்கின் விஷயத்தை மறந்தே போனார். இந்த நிலையில் ஒரு நாள்.....


வருங்காலத்தை உணர்ந்து சொல்லும் நிமித்திகர்கள் சிலர் வந்தார்கள் தர்பாருக்கு.
பால ஜோசியரே! சொல்ல வந்ததைப் பயப்படாமல் சொல்லுங்கள்.
ஆலம்பனா! உங்களுக்குப் பிறகு இந்த அரியணையிலே ஒரு அடிமைதான் அமரப் போகிறான். தங்கள் வாரிசுகள்....
ஹா...ஹா..ஹா...! இதில் புதுமை ஏதுமில்லை. என் பிள்ளைகள் யாருக்கும் அரியணை ஏறும் தகுதி கிடையாது. இந்நாட்டை நேர்மையுடன் ஆள அல்லாஹ் வேறு யாரையாவது அனுப்புவதையே நான் விரும்புகிறேன்.
ஆலம்பனா அல்தமிஷ் இவ்வளவு அலட்சியமாக மதித்ததை அந்தப் புரத்தில்....
நம் குழந்தைகளானால் என்ன? திறமையற்றவர்களுக்குத் தில்லியை ஆளும் தகுதி கிடையாது தான். தவிர விதியை யாரால் மாற்ற முடியும்?
முடியும். அரசனாகப்போகும் அந்த அடிமையைக் கண்டு பிடித்துக் கொன்று விட்டால்...?
ஹா..ஹா..ஹா! அந்த அடிமை யார் என்பது அல்லாஹ் ஒருவருக்கே தெரியும். அதை நாம் அறிவது எப்படி?
ராஜயோகமுடைய மனிதனைப் பார்த்தாலே தெரியுமாமே! அங்கலட்சணங்களைக் கொண்டு அந்த அடிமை யார் என்பதைக் கண்டு பிடித்து விடலாமாம். அந்த பால ஜோசியரே கூறினர்.
பேகம் சாஹிபாவின் கண்ணீர் நாட்டிலுள்ள எல்லா அடிமைகளையும் ஒன்று கூடும்படி உத்தரவு பிறப்பிக்க வைத்து விட்டது.
ஆலம்பனா! அடிமைகள் அவர்கள் தகுதிக்கேற்றபடி வரிசைப் படுத்தி, நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது.


ம்.. இதோ! விதியை வெல்லக்கூடிய வித்தக நிமித்திகன் இருக்கிறார். அவர் பார்வைக்கு ஒவ்வொரு அடிமையாக அனுப்பி வையுங்கள்.
அந்தஸ்துக் கேற்றபடி வரிசைப் படுத்தியதில் நீர்சுமப்பவர், தோட்டிகள் கடைசியில் இருந்தனர். நண்பகல் போதில்.....
ஏய், பசி வவுத்தைக் கிள்ளுது. நம்மை எப்போ கூப்பிடப் போறாங்களோ? யாரையாவது கடை வீதிக்கு அனுப்பி ஆகாரம் வாங்கி வரச் சொல்லலாமா?
யாரையாவது என்ன? இதோ நம்ம உக் இருக்கானே.
என்னையா? ஐயோ! சுல்தான் முன் செல்ல வேண்டிய முறை வந்தால்?
படா திறமைசாலி இவரு. உக்கைக் காணாட்டி சுல்தான் உசிரை விட்டுடுவாரு. போடா, சோனிப்பயலே!
ஆனால் அவர்கள் எதிர்பாராதது நிகழ்ந்தது. உக் திரும்ப நேரமாயிற்று. மன்னர் முன் அவன் செல்லவேண்டிய தருணமோ வந்து விட்டது. வஸீர் அவன் பெயரைக் கூப்பிட்ட போது...
டேய்! இப்ராஹீம்! போ, போ. நடுங்காதே. கேட்டால் நான் தான் உக் என்று தைரியமாகக் கூறு.. ஓடு
உக்கை உணவு வாங்க விரட்டியது அவன் சக அடிமைகளா? இல்லை. நிமித்திகனின் பார்வையிலிருந்து அகற்ற விதி செய்த சதி அது.
எங்கேடா, ஓடுகிறாய்? முட்டாளே! உன் பெயரில்-நீயாக- இப்ராஹிம் போய் விட்டான் மறுபடி நீ போனால்...?
எங்கள் திட்டு வெளிப்பட்டு நாங்கள் தண்டனை அடையவா?
நிமித்திகனின் அன்றைய பரிசோதனை தோல்வியில் முடிந்தது. ஆனால் அவன் வாக்கு பொய்க்கவில்லை. அல்த மிஷிக்குப் பிறகு நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களுக்குப் பிறகு-ரஸியாவும் இறந்துபட்ட பின், அரியணை ஏறி ஆட்சி செய்தவர் பால்பன்- அடிமை அரசர்களின் வமிசத்துக் கடைசி மன்னன், என்று சரித்திரம் கூறும். அந்த பால்பன்தான் இந்த அடிமை உக்கு.

உங்கள் குழந்தை
சாக்லேட்டை
மறுக்கிறானா?
இனிப்புகளைக்
கண்டு முகம் திருப்
பிக் கொள்ளு
கிறானா? சோர்வுற்றி
ருக்கிறானா?
கவலைப்படாதீர்கள்
பூந்தளிர் வாங்கிக்
கொடுங்கள்
அப்போது அவன்
முகத்தில்
ஏற்படும் மலர்ச்சி
யைப் பாருங்கள்!

**பூந்தளிர்**




வாண்டுமாமா
பார்வதி சித்திரக் கதை - 5
நவம்பர் வெளியீடு
பார்வதி சித்திரக் கதைகள்
நந்து
சுந்து
மந்து